
www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

# எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்



## நவஜோதி ஜோகரட்னம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

# எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்

நவஜோதி ஜோகரட்ணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முன்னுரை

"நான் என்னுடைய கவிதைகளோடும், வாழ்வோடும் பின்னிப் பிணைந்தவள்" படிக்கும் காலங்களில் சில கவிதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளேன். பத்திரி கைகளில் பிரசுரமாகின. எனது தந்தைதான் அகஸ்தியர் எங்கள் வீட்டுச் சுவரில் எனது கவிதைகளை தொங்க விட்டும், பத்திரப்படுத்தி வைத்தும் அழகு பார்ப்பார். ஆனால் அவர் பாதுகாத்த இலக்கியச் சொத்துக்கள் அத்தனையுமே சொந்த மண்ணில் சூறையாடப்பட்டு இழக்கப்பட்டமை சோகமான வரலாறு. எனது ஆத்ம சுருதிக்குள் இசைத்துக் கொண்டிருக்கும் என் தந்தையை விட்டு அவரது இலக்கியத்தைவிட்டு எனது இலக்கியத்தைப் பேச முடியாது என்பது யதார்த்தமான உண்மை. அந்நிய நாட்டில் அகதியாகி அவர் இதயம் வலித்ததை நான் அறிவேன். அது யாருமே ஈடுசெய்ய முடியாத வலி. அவரின் சிந்தைக்குள் இருந்ததை முழுவதுமாக நான் தெரிந்து கொள்ளவில்லை அல்லது பரிமாறிக் கொள்ளவில்லை; என்ற மண ஈறல் இன்றும் என்னை வாட்டிக் கொண்டே இருக்கிறது. பரவா யில்லை. அவர் விட்டுச் சென்ற அவரின் இலக்கியங்கள் என்னைத் தட்டிக் கொடுத்து வழிநடத்துகின்றன.

உலகம் மாறுதல்களோடு புரண்டு எழும்புகிறது. எனது குடும்பம் - எனது சமூகம் - எனது நாட்டு மக்கள் - அவர்களின் துன்ப துயர வேதனைகள், சோதனைகள், போராட்டங்கள், உயிர் இழப்புக்கள், எதனையும் நான் நேராகக் காணதவள். புலம் பெயர்ந்து இருந்து கொண்டு என்னுடைய நாட்டு மக்களின் வேதனையை என தாக்கிக் கொண்டவள். எனது மன அவசத்தின் உணர்வு கள் கவிதைகளாகிப் பிறந்து எழுந்தன.

'நன்றி கெட்ட நாய்' என்று பேசுவதைக் கேட்டிருக் கிறேன். ஏன் அப்படிக் கூறுகிறார்கள் என்று தெரிய வில்லை. அகதியாகிப் பாதிக்கப்பட்டபோது எங்கள் வீட்டு நாயின் நன்றியை நினைத்துப் பார்க்கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புலம் பெயர்ந்து நாங்கள் உயிர் பிழைத்தோம். ஆனால் எங்கள் நாய்.... இப்படி எத்தனை நாய்கள்..... எல்லாமேதான். நாட்டு நினைவுகள் சிந்தையைத் தின்னுவது போலிருக்கும்.

உலகம் எங்கும் எமது நாட்டு மக்கள் சிதறி குமுறிக் கொண்டிருக்கிறார்கள். பலவிதமான பிரச்சினைகளு டன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகள் அதிகம். குறிப்பாகப் பெண்களின் பிரச்சினைகள் என் மனதைக் குடைவதுண்டு.

ஊக்கம் - சுய அனுபவம் - அறிவு - சிந்தனை - விடா முயற்சி இவைதான் சிறந்த வாழ்க்கைக்கு அணிகலன். அறிவுச் சுடர் கொழுத்திய சோக்ரட்டீஸ் அவர்களின் அற்புதமான கருத்துக்கள். என்னுள் அவை ஆகர்ஷிப்பதோடு, அவற்றினூடே எனது கவிதைகள் பரிணமிப்பதுண்டு.

எனது கவிதைகளை லண்டன் 'தீபம்' தொலைக்காட்சி - T.T.N தொலைக்காட்சி - மற்றும் ETBC - IBC - ABC - லண்டன் தமிழ் வானொலி போன்றன ஒளி, ஒலி பரப்பியதுடன் - இலங்கை வெளியீடுகளான தினகரன், வீரகேசரி, நவமணி, ஞானம், கவிப்ரகவாகம் - பாரீஸ் ஈழநாடு - ABC வானொலித் தொகுப்பு - வண்ணை - முற்றம் மற்றும் லண்டன் தேசம், நிருபம், வடலி, திருவருள் போன்றவற்றிலும் 'பதிவுகள்', திண்ணை இணையத் தளங்களிலும் பிரசுரமானது மகிழ்வைத் தருகின்றது.

நல்ல கருத்துக்களையும் அறிவுரைகளையும் கூறும் 'தீபம்' தொலைக்காட்சிச் செய்திப் பொறுப்பாளர் கலாநிதி மு.நித்தியானந்தன், என்னைக் கவிதைகள் எழுதுவதில் ஊக்கப்படுத்தியும், நான் யோசித்திருக்காத வேளையில் எனது தொகுப்பு வெளிவரவேண்டும் என்று என் சிந்தையைக் கிளறி அதனை தொகுப் பாக்கிய கவிஞர் - எழுத்தாளர் - அறிப்பாளர் M.N.M.



அனஸ் (இளைய அப்துல்லாஹ்) ஆகியோர் என்றும் நினைவுக்குரியோர்.

பெண்களை ஆண்கள் முன்னேற விடுகிறார்கள் இல்லை, பெண்களை அடக்குகிறார்கள், பெண் களுக்குச் சுதந்திரமில்லை - கருத்துச் சொல்ல இடம் அளிப்பதில்லை என்பவற்றிற்கு அப்பால் - எவ்வித குறுக்கீடும் செய்யாமல் - என்னைச் சுதந்திரமாக இயங்கவிடும் என்பது துணைவர் S.B. ஜோகரட்னத்தை யும் இக்காலை மனதிருத்துகின்றேன்.

நவஜோதி. ஜோகரட்ணம்
12-07-2005
லண்டன்.

127, Long Elmes,
Harrow
HA3 5LB
UK.

*Watch our girls march fearless of the fight*
*Torch of learning burning ever bright*

- இளவாலை கன்னியர்
மடத்தின் பாடசாலை கீதம்

இளவாலை கன்னியர் மடத்தில் குளிர் நிழல் பரப்பும் மகோகனி மரத்தில் சிறகடித்துத் திரிந்த வானம்பாடி ஊசிப்பனித் தேசத்தில் தரித்து நின்று தன் வாழ்வின் சோபனங்களைத் தொலைத்து விட்ட துயரத்தின் துளிகளில் இந்தக் கவிதைத் தாள்கள் நனைந்திருக்கின்றன.

"நடு இரவில்
எனக்கு மட்டும் சூரியன் உதிக்கிறான்
சூரியன் உதிக்கும் பொழுது
இருள் தோன்றுகிறது."

என்ற நவஜோதியின் வரிகள் ஒரு பெண் கவியின் சூக்கும உலகின் சிக்கலான பரிமாணங்களைக் கோடி காட்டுகின்றன.

"ஏனோ என் கவிதைகள்
சோகங்களையே சுமந்து செல்கின்றன."

என்றும் கூறும் நவஜோதியின் கவிதைகளில் தெறிக்கும் சோகம் அவரது வாழ்வுத் தரிசனத்தில் ரத்தக் கீறல்கள். முள்வேலிகளின் இறுக்கத்திற்குள் குமுறும் வெம்மை மூச்சுகள்.

வீட்டுச் செம்பரத்தையின் சிவந்த சிரிப்பை -
மல்லிகையின் நறுமணத்தை -
கொஞ்சித் தழுவிய வேப்பங் காற்றை

துல்லியமாய் நினைவு கூரும் நவஜோதியின் கவியுலகு பிறந்த மண்ணின் சுவாசத்தால் வெப்பமூட்டப்பட்டிருக்கிறது. தந்தையோடு தாவித் திரிந்த நாள் எங்கே? என்ற கேள்விகள் அவரின் கனவுலகின் எல்லா முனைகளிலும் எதிரொலிக்கின்றன.



நவஜோதி தன் கவிதைகளில் தன் இனிய பாடசாலை நாட்களுக்கு, தன் பள்ளித் தோழிகளுக்கு, தான் உலாவி வந்த சிற்றூருக்கு, தனக்கு ஆதர்ஸமாய்த் திகழ்ந்த தந்தையின் நினைவிற்கு அடிக்கடி சென்று திரும்புகின்றார். பள்ளிக் காலங்களை இனிய கனாக் காலங்களாய் ஏக்கத்தோடு நோக்கும் அனுபவத்தை யாருமே பங்கு போட்டுக் கொள்வது சாத்தியம்தான். சொந்த மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து ஐரோப்பிய உலகிற்குள் வீசப்பட்ட போது - வாழ்வின் மாறுப்பட்ட முகாம்களுக்குள் நுழைந்த போது எதிரும் புதிருமான கோணங்களை ஏக காலத்திலே தரிசிக்கிறார். எதிர் எதிர் முனைகளில் தோற்றம் காணும் கருத்துகளின் சாராம்ச எல்லைகள் கறாராக இல்லை என்பதை உணர்கிறார்.

'வாழ்வின் சுழற்சியில்
நிராசைகளும் நம்பிக்கைகளும்
கனவுகளும் கண்ணீரும்
ஏக்கமும் துன்பமும்
வெற்றியும் தோல்வியும்
உயிரும் மரணமும்
நியதியாய்ப் பதிகின்றதே'

என்று 'நெஞ்சின் கீறல்கள்' என்ற கவிதையிலே குறிக்கின்றார் நவஜோதி.

வாழ்வின் சுழற்சியில் எதிர்த்துருவப் போக்குகளை இயல்பாய் காணும் போக்கு பல புலம்பெயர் கவிதைகளின் முக்கிய பண்பாக முகிழ்ப்பதை நாம் காணலாம். இலங்கையில் பிறந்து கனடாக் கவியாக அடையாளம் காணப்படும் Rienzi Cursz ன் கவிதைகளில் இத்தகைய பண்பினை ஆங்கில விமர்சகர் செல்வா கனகநாயகம் இனம் காண்கிறார்.

(Dark Antonyms and Paradise - The poetry of Rienzi crusz by Chelva Kanaganayagam

www.tamilarangam.net


"பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்?
அழுவதை நிறுத்து"
என்று தீர்க்கமாகவே குரல் தரும் நவஜோதி

"அழுதே சுமக்கிறேன்" என்கிறார். பெண் ணின் துயரை, தாபங்களை, ஏக்கங்களை, பாலியல் வேட்கை களை, பெண்ணின் உடலை துணிவோடு வார்த்தை களில் வடிக்கும் திராணியை நவஜோதியின் கவிதை களில் காணமுடிகிறது. Male gaze பார்வைகளை சங்கடப்படுத்தும் கவிதைகளும் இத் தொகுப்பில் மிளிர் கின்றன.. பெண்களைத் தெய்வங்களாக சட்டென்று அங்கீகரித்துக் கொண்டு விடும் சமூகம் அவளை அன்றாட வாழ்வில் சமத்துவ உரிமை கொண்ட வளாக ஏற்க மறுத்துவிடுகிறது. இந்நிலையில் பெண் கவி கலகக்குரலாக மட்டுமே ஒலிக்க முடிகிறது. நவஜோதி யின் கவிதைகளில் பீறிடும் துயரமும் ஏக்கமும் சோகமும் சமூக யதார்த்தத்தின் மீதான கண்டனத்தின் சாய லையே கொண்டுள்ளன. அவரது இதயத்தின் தவிப்பு வெற்றுப் பிரபஞ்சத்தில் விசிறப்படும் வீணை நரம்பு களில் இசை மீட்கிறது.

"எவ்வளவு இனிமையாக வாசித்தாலும்
என் விரல்கள் மீட்டும் வீணை.
அபஸ்வரம் குமுறும் நரம்புகள்
வீணையை எப்போ வேண்டுமானாலும்
வாசித்துக் கொள்வேன்.
வசதிபோல் முழுநிலவை
ரசிக்க முடியுமா?"

என்று தன் கவிதையில் கேள்வி எழுப்புகிறர் நவஜோதி. சமூக கட்டமைப்பின் கொடுந்தளைகளுக்குள் வீணை மீட்டலிலும் அபஸ்வரம் தொனிக்கையில் இயற்கையின் ஆராதனையில் அவர் தோய்ந்து போய்விடுகிறார்.

****



லண்டனில் தனித்த ஒரு பெண் கவியின் கவிதைக் குரலாக "எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்" என்ற தொகுப்பு தனிச்சிறப்பு பெறுகின்றது. லண்டனில் இசை, நடனம் போன்ற லலித கலைகளில் பெண்களுக்கு பஞ்சமில்லை என்றாலும் லண்டனில் சோபையிழந்து நிற்கும் கவித்துவ வானில் நவஜோதி தாரகையாய் ஒளிர்கிறார். லண்டனில் சிறுகதை, நாவல் என்றதும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தைச் சுட்ட முடிவது போல கவிதைக்கு நவஜோதியை தான் முன்னுதாரண மாக காட்டமுடியும்.

ஜோகினி, மாஜிதா ஆகிய புனைபெயர்களில் எழுதிவரும் நவஜோதி யோகரட்ணம் யாழ்ப்பாணம் இளவாலை கொன்வென்டின் வார்ப்பு. தலவாக்கொலை, பண்டார வளை ஆகிய மலைப்பகுதிகளில் ஆசிரியையாக பணியாற்றிய காலங்களில் மலையகப் பெண்களின் துயரங்கவிந்த வாழ்வை நேரடியாகவே காணும் அனுபவம் வாய்க்கப்பெற்றவர். வேல் ஆனந்தன், வீரமணிஐயர், பத்மினி போன்றவர்களின் நடனச் சூழலுக்கும் பரிச்சயமான நவஜோதி நடன நாட்டியங் களிலும் தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் மூல புருஷர்களில் ஒருவரான அகஸ்திரியரின் புத்திரியான இவர் தந்தை யின் மிருதங்க வாசிப்பில் லயித்த ரசனையை இத் தொகுப்பின் சில கவிதைகளில் அழகாகவே பதிவு செய்திருக்கிறார்.

எண்பதுகளில் ஆரம்பத்தில் பிரான்சை நோக்கி புலம் பெயர்ந்த நவஜோதி முறையாகவே பிரஞ்சு மொழியைக் கற்று சரளமாக உரையாற்றும் ஆளுமை கொண்டவர். பிரஞ்சுக் கலாசாரத்தால் ஆகர்ஷிக்கப்பட்டவர் என்று இவரைக்கூறுதல் சாலும். இயற்கை எழில் சிந்தும் தலவாக்கொலையில் கணித ஆசிரியையாகத் திகழ்ந்த நவஜோதி தன் கவிதையின் ஊற்றுக் கால்களை லண்டனில் இனம் காண்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லண்டனில் தமிழ் ஊடகங்கள் கவிதைத்துறைக்கு ஆற்றியுள்ள பெரும்பணிக்கு நவஜோதியின் இக் கவிதைத் தொகுப்பு நல்ல சாட்சியமாகிறது. லண்டனில் திரு. நடாமோகனின் First Audio வானொலியில் நவஜோதியின் கவிதை ஆரம்பத்தில் உலா வந்தது. இதனைத் தொடர்ந்து தீபம், TTN ஆகிய தொலைக் காட்சிகளில் ETBC வானொலியிலும் இவரது கவிதை கள் இடம்பெற்றன. ஹரோ நூலகத்தின் ஆசிய எழுத்தாளர்களின் கவிதைப் பட்டறையில் இவர் ஆக்கிய In My Musical Heart சிறந்த கவிதையாக சிலாகிக்கப்பட்டது.

தீவிர எழுத்து ஈடுபாடு கொண்ட நவஜோதி புலம் பெயர் வாழ்வை நன்கு சித்தரிக்கும் பல சிறுகதைகளை இலங்கை வார இதழ்களில் எழுதியுள்ளார். நவஜோதி எழுதிய "தளிருக்குள் துளிர்" என்ற சிறுகதை புலோலியூர் க. சதாசிவம் நினைவுச் சிறுகதைப் போட்டி யில் 'ஞானம்' சான்றிதழ் பரிசைப் பெற்றுள்ளது. கவிதை, சிறுகதைத் துறை ஈடுபாட்டுடன் லண்டன் நூல் விமர் சன அரங்குகளிலும் நவஜோதி சர்ச்சைக்குரிய பல நூல்கள் மீது தனது அபிப்பிராயத்தை முன்வைத திருக்கிறார். இலக்கிய நடவடிக்கைகளிலும் சமூகச் செயற்பாடுகளிலும் அயராது உழைத்து வரும் நவஜோதி சமூக உணர்வு கொண்ட பெண்ணாவார். ஒடுக்குதலும் சுரண்டலும் அநியாயமும் தலைவிரித்தாடும் போதெல்-லாம் அவற்றிற்கு மனித நேயத்தோடு எதிர்வினை யாற்றும் வேகம் கொண்டவர். நவஜோதியின்

"எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்" புலம்பெயர் இலக்கியத்தில் கவனத்திற்குரிய ஒரு பெண்ணின் கவிதைத் தொகுப்பாக அமையும் என்று நம்புகிறேன்.

"உன்னுடைய வார்த்தைகளால்
நீ என்னைக் குதறலாம்.



உன் பார்வையால்
நீ என்னை கிழிக்கலாம்
வெறுப்பை உமிழ்ந்து
என்னை நீ கொன்றுவிடவும் கூடும்.
ஆனாலும் காற்றைப் போல
நான் மீண்டும் எழுவேன்."

என்ற ஆபிரிக்க அமெரிக்க பெண்ணியக் கவி மாயா அஞ்செலுவின் வைரவரிகள் இந்த முன்னுரையின் முத்தாய்ப்பாய் அமையவல்லன.

மு. நித்தியானந்தன்
1113 Landsbury Drive
Hayes, Middlesex
UB4 8RP
UK



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நவஜோதி, அகஸ்தியரின் மகள் என்பது மட்டும் கவிதைகளை எழுவதற்கான அடையாளம் இல்லை.

நவஜோதிக்குள் இருக்கும் ஒரு கவிதைக் குரல் தான் 'எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்'. அவரது முதலாவது கவிதைகளின் தொகுப்பு இது.

வரலாறும் அனுபவமும் எப்பொழுதும் பண்பட்ட ஆக்க இலக்கியவாதிகளைத் தரும். லண்டனில் இருந்தபோது 'தீபம்' தொலைக்காட்சியின் இலக்கிய நேரம் பகுதிக்கு ஆர்வமுடன் அவர் எழுதிய கவிதைகள் சிலவும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கு நான் 'விஷுவல்' சேர்த்து அழகுபடுத்தியிருந்தேன் ஒளிபரப்பிற்கு. மனப்பதிவுகள், மன அதிர்வுகள், வெளிப்பாடுகள் இவரது கவிதைகளில் இடம் பெற்றிருக்கின்றன.

கவிதைகளுக்கு என்ன வரையறை கொடுப்பது என்பது பல வாறாக விமர்சனத்துக்கு உள்ளாகும் ஒன்று.

எல்லாக் கைகளையும் தட்டிவிட்டு அகல விரித்துக் கொண்டு 'புதுக்கவிதை' தனது ஆழத்தைப்பதித்து ஆண்டுகள் பல.

எமது ஆழ் மனதுக்குள் சிக்காராக உட்கார்ந்து கொண்டிருக்கும் தலைப்பாகைக் கவிஞன் எல்லா வற்றையும் 39 வயதுக்குள் கொண்டு வந்து கொட்டி விட்டான். அவனை விட அவனைவிட வேறு யார் உளர். பாரதியின் பிறந்த நாள் - 1882 - டிசம்பர் -11. இவ்வுலகை விட்டுப் போனநாள் 1921 - செப்டம்பர் 12.

இந்த குறுகிய காலத்துக்குள் செய்து விட்டுப் போன கவிதைகளால் மட்டுமே அவன் உலகம் முடியும் வரை வாழுகிறான்.

'கவிதைகள் என்ன சாதிக்கும்' என்பவர்களுக்காக சொன்னது அது. ஒரு மனிதனை அழியாமல் வைத்தி ருக்கும் வல்லமை கவிதைகளுக்கு உண்டு.



ஒவ்வொரு முறையும் பெண்கள் எழுதும் போதும் என்ன எழுதுகிறார்கள் என்று பார்க்கிறார்கள். எனது செவ்வியொன்றால் பிராங்போட் ரஞ்சனி சொன்னது இன்னும் மனதுக்குள் இருக்கிறது. "பெண்கள் ஆண்கள் என்று என்ன? இரண்டும் சாப்பிடுவது ஒரே மாதிரி, குடிப்பது ஒரே மாதிரி சுவாசிப்பது ஒரே மாதிரி, பேசுவது ஒரே மாதிரி, சிரிப்பது ஒரே மாதிரி, கேட்பது ஒரே மாதிரி, பின்னரென்ன வேறுபாடு மேல் எண்ணம் ஆண் என்பது".

"எழுத்துக்கள் என்ன செய்து விடப் போகின்றன. எவ்வளவு எழுதினோம், எழுதுகிறோம் ஆனால் சமூகம் மாறுகிறதா" என்று பத்திரிகையாளரான எனது நண்பி ஒருத்தி கேட்டாள். "தொடர்ந்து செய்யுங்கள் எங்காவது ஒரு அதிர்வு ஏற்படும் சிலவேளை உங்கள் பார்வை படாத இடத்தில் கூட அது நிகழலாம்" என்றேன்.

கவிதைகளை தொகுப்புக்காக தெரிவு செய்வது எப்படி என்பதில் படைப்பாளிகளின் தைரியம் எந்த மட்டில் இருக்க வேண்டும் எனப்படுவது மிகவும் குழப்பகர மானதாகவே இருக்கிறது. பத்திரிகைகளில் சஞ்சிகை களில் பிரசுரமாகும் படைப்புகள் கவிதைகள் எல்லாம் தொகுப்பிற்கு எடுபடுமா என்ற அச்சம் இருக்கிறது.

தெரிவு என்பது என்ன? வெளிவந்த கவிதைகள் தானே இவை. எல்லாவற்றையும் தொகுப்பில் சேர்க்கலாமே என்பது தான் நவஜோதியின் அபிப்பிராயமாக இருந்தது.

பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் பிரசுரமாகும் போது அழகாக இருக்கும் கவிதைகள் தொகுப்பில் வரும்போது அழகாக இல்லாமல் போகின்றதா? அல்லது என்ன?.

கவிதைகளை எப்படி எழுவது என்பது குறித்து அவர வர்க்கும் ஒவ்வொரு தேவையும் ரசனையும் வெளிப் பாடும் இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

நவஜோதிக்கு கவிதைகள் உணர்வுகளின் வடிகாலா கவும் ஆறுதலாகவும் இருப்பதனை உணருகிறேன்.

மன நெருடல்கள் கவிதையாகவோ, சிறுகதையாகவோ வேறு ஏதாவதாகவோ வடிகாலாய் மொழியாய் பிரிக்கப் படும் போது ஒரு ஆறுதல் வரத்தான் செய்யும். அந்த ஆறுதல் தான்.

'நானும் உன்னுடன் வந்திருக்கலாமே
என நினைத்தேன்
எவ்வளவு தூரம் வந்தாலும்
ஓர் இடத்தில் பிரியத்தானே வேண்டும்
அந்த இனிய அனுபவத்தை
நெஞ்சில் தேக்கிக் கொண்டேன்
புகையிரதம் போய்க் கொண்டிருந்தது.

(உனக்கு நினைவிருக்கிறதா).

ஒரு தேர்ந்த வாசகன் கவிதைகளுக்குள் தன்னை உட்புகுத்தி அதன் இடைவெளிகளை நெருக்கிக் கொண்டு ஐக்கியமாகும் போது கவிதை வெற்றியடைந்து விடுகிறது.

சில வேளைகளில் கவிதைகள் குறிப்பிட்ட எழுத் தாளரின் தன்னுணர்வால் மட்டும் வெளிப்படும் போது அது வாசகனுக்கு சலிப்பைக் கூட தந்து விடும். அதற் காக எதை எழுதலாம் எதை எழுதாமல் விடலாம் என்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை /தரப்படக் கூடாது.

மனத்தின் பாடுகளை கவிதையாக்கி பார்ப்பது தானே கவிஞனின் வேலை.

உண்மையில் உறவுகள், எமது பூமி, தாய்நிலம் பார்க்கும் அவலங்கள் இவைகளை கவிதைகளாக வெளிப் படுத்தும் அற்புதம் கவிஞர்களுக்கு மட்டுமே வாய்த்தது.

எத்தனையோ உணர்வுகளை மனதுக்குள் புதைத்து வைத்திருக்கும் எல்லோருக்கும் சொல்லத் தெரியாது,



ஆனால் உணர்வுகள் இருக்கும் எழுதத் தெரியாது. உலகில் உள்ள மனிதர்களில் எத்தனைபேர் எழுத் தாளர்கள். எத்தனை பேர் மற்றவர்களை ஆகர்ஷித் திருக்கிறார்கள்.

எண்ணிப் பார்த்தால் லட்சக் கணக்கான மனிதர் களுக்குள் ஒரு கவிஞர் உட்கார்ந்திருப்பார். உண்மையில் கவிஞன் ஒரு அற்புதம் தானே.

நெகிழும், மிதக்கும், வேதனைப்படுத்தும், எம்பிக் குதிக்கும் உணர்வுகளை கவிதைகளால் வடிய விடுவது ஒரு ஆசுவசிப்புத்தான்.

'பகலில் தேவையில்லாமல்
தேய்ந்து விட்டேன்
இரவின் அமைதியைத் தேடுகிறேன்
நிம்மதியை;
இரவின் கருப்பைக்குள் தேடுகிறேன்
நினைத்துப் பார்க்கிறேன்
வியர்த்தம் தெரிகிறது.
போர் கடுமையாக இருந்த போது
கையில் வரும் வெற்றியின் இனிமை,
என்னுள் பிறை தெரிகிறது.
நான் பிறை கண்டவள்
நிலாக் கண்டவள் அல்ல,

(இதயத்தின் தவிப்பு)

இது நவஜோதியின் ஆசுவாசிப்பு.

பெரும்பாலான கவிதைகளில் தனிமை மட்டுமே உள் வாங்கப்பட்டிருப்பதும் சில புள்ளிகளைமட்டும் சுற்றி வருவதும் வாசகனுக்கு சலிப்பைத் தரலாம். மொழியின் போதாமை தொக்கி நிற்பதனை குறிப்பிடாமல் செல்ல முடியவில்லை எனக்கு. ஆழமான வாசிப்பு இன்னும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

உள்வாங்குதல், மொழியை செழுமை செய்தல் போன்ற வற்றை நவஜோதிக்கு சொல்லக் கூடிய ஒன்று என்னால்.

கவிதைளோடு வாசம் செய்வதும் கவிதைகளோடு சயனிப்பதும் எவ்வளவு சுகமானது.

லண்டனில் ஒரு நல்ல கவிதை சொல்பவர் கிடைத்தி ருக்கிறார். அவர் தன்னை வளர்த்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

கவிஞருக்குள் இருக்கும் இரக்கம், அன்பு, மற்றவரை கனம் பண்ணுதல், விருந்தோம்பல் என்ற எல்லாப் பண்புகளும் நவஜோதியில் இருக்கின்றன.

ஜோகரத்தினத்திலும் அது மிகையாகவே இயல்பாகவே வாய்க்கப் பெற்றிருக்கிறது.

இதனை மன மகிழ்ச்சியோடு சொல்கிறேன்.

இளைய அப்துல்லாஹ்
1273 B, Ananda Mawatha,
Hunupitiya,
Wattala
Sri Lanka.





www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## ஆத்மாவின் அதிர்ப்பு

மொழிகளினூடாக
அந்தச்
சில நேரங்களில்
உன் உணர்வும்
என் உணர்வும்
நெருங்கும்போது
நர்த்தகமாடியது....

கடும்பனி பரவி என்னை
கொடுமைப் படுத்தும்போதெல்லாம்
எனது வீட்டை
எனது மொழியை
எனது காற்றை
எண்ணியபடி... கண்கள்
அண்ணார்ந்து பார்த்தபடி
ஆனால்
என் மெல்லிய இதயத்தில்
உன் பாதங்கள் மட்டும்
மெலிதாய் அதிர்ந்து
தாளம் போடும்...

மனிதனுக்கு
மரணம்வரை
கற்றலும் கற்பனையும் .. என்
நரம்புகளும் எலும்புகளும்
சதைக் கோளங்களுக்குள்
மறைந்து நின்று
காட்டும் கோலங்கள்
அந்த இருளில்
அமுங்கிக் கிடந்தபோது
குமைகின்ற கற்பனைகள்

குளிர்கால மரங்களின்மேல்
எழுகின்ற மூச்சுக்கள்

www.tamilarangam.net



எழும்ப முடியாது
துவளும் உடலில்
உருப்போடும் மந்திரங்கள்
மயக்கம்
பூரண சந்திரனை
ராகு விழுங்குவதுபோல்
ஊடுருவும் கீற்றுக்கள்
ஊமையாய்
உன் விழி பார்த்து...

அந்தரத்தில் அமுங்கி
ஒளியும் வானமும் போல்
ஆழமாய்க்கலந்து
சுடர்விட்டது...
ஆனால் கங்கையின் பெருக்கத்தால்
காற்றாகி மறையும்
கனவு உருவமாகிறது...

பரவாயில்லை
உலகமே உன் அச்சில்
சுழல்க சுழல்க
இயற்கை அழகில் உன்
காலத்தைச் செலவிடு
வான்வெளியில் உருப்போட்டு
அழகாக பேசத் தெரிந்திருக்கின்றாய்!
உன்னை முத்தமிட்டுக்கொள்ளவோ
உன் மார்பில் புதையவோ முடியாது
பெருமூச்சுக்கள்.
வெறித்த பார்வையில் அந்த
நிலவும் மறைகின்றது....

௨00௪



## உனக்கு நினைவிருக்கிறதா....?

உனக்கு நினைவிருக்கிறதா?
வாழ்க்கைப் பயணம் தொடர்வதுபோல்
அந்தப் புகையிரதத்தில்
எம் அறிமுகம் தொடங்கியது.

உனக்கும் எனக்கும் இடையில்
சொந்தமும் இல்லை
பழக்கமும் இல்லை
பேச்சு இல்லை
மொழி இல்லை

நான் ஜன்னல் லோரம் இருந்தேன்
நீ எனக்கு முன்னால் இருந்தாய்
உனக்கும் எனக்கும்
சிறிய இடைவெளி
என்ன காரணத்தினாலோ
எதன் உதவியாலோ
இடையே நிகழ்ந்தவை
அதன் பெயர் என்ன?...

நிகழ்ந்தவை மட்டும்
பசுமையாய் சிலிர்க்கிறது
கைகள் இணைந்து
பேசிய பேச்சுக்கள்
அப்படி ஓர் அனுபவம்
ஜன்மத்தில் இல்லை

இருவரும் ஒருவரை ஒருவர்
சொந்தமாகப் பார்த்து
பயணத்தில் நின்று
கண்கள்.....
பூத்துச் சிரித்தோம்

www.tamilarangam.net


புகையிரதம் தரித்தது
நீ போகவேண்டும்
நீயும் குழந்தைதான்
உன் கண்கள்
சிவந்து குழம்பிக் கலங்கின
உனக்குத் தெரியாது
நான் உட்கார்ந்து
தேம்பித் தேம்பி அழுதேன்...

நானும் உன்னுடன் வந்திருக்கலாமே
என நினைத்தேன்
எவ்வளவு தூரம் வந்தாலும்
ஓர் இடத்தில் பிரியத்தானே வேண்டும்
அந்த இனிய அனுபவத்தை
நெஞ்சில் தேக்கிக் கொண்டேன்
புகையிரதம் போய்க்கொண்டிருந்து

இப்போது நீ
உன் பிள்ளைப் பாசத்தில்
முற்றி முதிர்ந்து
என்னென்னவோ ஆகிவிட்டோம்!
ஆனால்
அந்த உணர்கை
அதுபோன்ற ஸ்பரிசம்
பேசிய பேச்சுக்கள்
உனக்கு நினைவிருக்கிறதா....?

2003



## அவனும் அவளும் சமாந்தரமாயினர்

வசந்த காலத்தின்
விசாலமான
வயலின் பூ பாகத்தில்
காற்றில் அசைந்த
தங்க நிற
கோதுமைக் கதிர்கள்...
வயலின் புற்களை
அறுத்த அந்தத்தில்
அந்த
கன்றும் மாடும்
தழுவிக் கலந்து
தடவிக் கொண்டிருந்தன...

அவளின்
சல சலத்த கால் கொலுசு
சிலு சிலுத்த தண்ணீர்
துள்ளித் துள்ளி ஓடிய
இள மங்கை
அள்ளித் தூக்கிய பாவாடையை
அணைத்து
வாய்க்காலில் கால் கழுவ
சொர்க்க நிலத்தின்
சுதந்திரம் வேண்டி
கொலுசும் தண்ணீரும்
கவி புனைந்துகொண்டிருந்தன...

அவனின்
பஞ்சடைந்த கண்கள்
கசந்து இருட்டும்
வெய்யிலின் வெப்பம்
புழுதி படர்ந்த பாதங்கள்
செம்பட்டைத் தலை
தள்ளாடிய உடம்பு

www.tamilarangam.net



தொண்டை வரண்டு
உதடுகள் உலர்ந்து
வாடியிருந்த முகம்
ஆனால்
ஒலித்து விம்மும் இளமை
பொங்கிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது...

வழிப்போக்கனின்
எலும்புகளும்
உடல் வாகும்
வெளிப்படுத்துகின்ற ஆண்மை...

அவளுள்
ஊற்றெடுத்த புன்முறுவல்
முடைந்து முறிவெடுக்க
கொஞ்சம்
உரத்து மூச்சுவிட்டாள்...

அரும்பித்துளிர்த்த
முகத்து வியர்வையை
துடைத்த கரங்கள்
கழுத்தையும் மூக்கையும்
இறுக்கி
கூசல்
கண்களை விரித்து
கவிதைகளாக்கி
குறிபார்த்துக் குழைந்தான்...

கலந்தோடும் கடலில்
கயிறெறிந்து
கய மீன் பிடிபடும் சாடை...
பூசாத கற் சுவரின்
கடைசி வரியாய்
அவள் கண்கள்...



மூர்ச்சையாகி விழித்த
இருவர் கண்களும்
ஊடுருவிக் கொண்டன...

சோராத சிந்தனைகள்
சிதறி மௌனமாகி
பூமி விழுங்கிக் கொண்டிருந்தது...

வயல் வெளி வசந்தம் கொடுக்க
நீயும் நானும்
விடிகாலை வரை இருக்க
நிரந்தர சுதந்திரம் வேண்டும்....!

கனவினில் அவளும்
கவிதையில் அவனும்
சமாந்திரமாயினர்....

2002

www.tamilarangam.net


## வீரப் பெண்ணே!

அடி விரப் பெண்ணே!
செழிப்பான கிராமத்தில்
செவ்வந்திப் பூப் போல
சிரித்த முகத்துடன்
சிறகடித்துப் பறந்தாயேடி!

தேசத்தின் தீ உந்தன்
இதயத்தைப் பிழிந்து
பிச்சு எரித்தபோது - நீ
தீ அனலாக மாறி
அனைத்தையும் துறந்து - உன்
அண்ணர்களோடு
அக்கினிப் பூவாய்
அஞ்சாது நின்றாயேடி...!

எத்தனை சுயநலம்
எண்ணுகிறேன் எமக்குள்...
காதல் வயப்பட்டு
கருவில் சிசு சுமந்து
குடும்பச் சுமை தாங்கி
உணர்வுகள் ஜடங்களாகி
உருளும் இந்த வாழ்வில் - நீ

புதுயுகம் படைக்க
புயலாக எழுந்தாயடி.... பெண்
ஆதிக்க வெறியர்களின்
அறிவுரையை உடைத்து
வாயடைக்க வைச்சாயடி
நீ நேசித்த - உன்
தேசத்து மக்களை
இதயத்தில் சுமந்து
பாசத்தால் நிறைத்தாயடி...



நிலம் பார்த்த நடையையும்
நிறைந்த சுமைகளையும்
நெருப்பு நிலவுகளையும்
நிமிர வெடித்தாயடி... போரில்
ஆணோடு பெண் சமத்துவம் பேணி
சமர் கொண்டு மாண்டாயடி...

கனவுகள் நனவாக
சுதந்தர வேட்கையில்
விடியலைத் தேடும்
விடிவெள்ளி ஆனாயடி... உன்
அஸ்தமனம் எம் தேசத்தின்... எம் மக்களின்
விடியலின் அத்திவாரமடி... உன்
கல்லறை காலத்தால்...
அழியாது பதியும்
காவியமானதடி


உன் சுவடுகள் பதித்த
வீர காவியங்கள்
சரித்திர படிகளடி
பெண்மைப் பூவான... உன்
இதழின் உதிர்வு
எம் மண்ணுக்கு உரமடி...
மானுட விடுதலைக்காய்... உன்
வீர சாகசங்கள்
என்னை சிலிர்க்க வைக்குதடி...

அடி வீரப் பெண்ணே!
அக்கினிப் பூக்களை
அள்ளிச் சொரிந்தவளே!
ஆழ்ந்து உறங்கிவிட்டாயாடி...
அடிக்கடி குமுறும் - என்
விழிப்பூக்கள்

செய்திகள் கேட்ட காதுகள்
செவிமடுபோல் உணர்கிறேனடி
என்னுடல் நரம்புகளும்
உன் மூச்சுக்களும்
ஊனமாய் வழிந்து
நாதமாய் ஒலிக்குதடி....

அடி வீரப் பெண்ணே!
என்
சிந்தையைப் புரட்டிடும்
இமைகள் சாய்த்து உனை
கைகூப்பி வணங்குகிறேன்

2002



www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## இதுவா காதல் ?

மொழிகளினூடாக
அந்தச்
சில நேரங்களில்
உன் உணர்வும்
நெருங்கும்போது
நர்த்தகமாடியது....

மனிதனுக்கு
மரணம்வரை
கற்றலும் கற்பனையும்
என்
நரம்புகளும் எலும்புகளும்
சதைக் கோளங்களுக்குள்
மறைந்து நின்று
காட்டும் கோலங்கள்
அந்த இருளில்
அமுங்கிக் கிடந்தபோது
குமைகின்ற கற்பனைகள்

குளிர்கால மரங்களின்மேல்
எழுகின்ற மூச்சுக்கள்
எழும்ப முடியாது
துவளும் உடலில்
உருப்போடும் மந்திரங்கள்
மயக்கம்
பூரண சந்திரனை
ராகு விழுங்குவதுபோல்
ஊடுருவும் கீற்றுக்கள்
ஊமையாய்
உன் விழி பார்த்து...

2004



## இதயத்தின் தவிப்பு

வெற்று மஞ்சத்தில்
விசிறப்படும் வீணை நரம்புகள் ...
தாகத்துடன் தாளம் போட்டு
தவிப்போடு இசைக்கிறது ...

நிசப்தமான இரவு ...
நிம்மதியான இரவு ...
அதையான இரவு ...
உலகமே நின்றதுபோன்ற உணர்வு ...

பகலில் தேவையில்லாமல்
தேய்ந்துவிட்டேன்...
இரவின் அமைதியைத் தேடுகின்றேன்...
நினைத்துப் பார்க்கின்றது...
வியர்த்தம் தெரிகின்றது...
போர் கடுமையாக இருந்த போது
கையில் வரும் வெற்றியின் இனிமை...
என்னுள் பிறை தெரிகிறது...
நான் பிறை கண்டவள்
நிலாக் கண்டவள் அல்ல...

மலைச்சாரலில் நெடிய பாதைகள்...
மலையின் உச்சியில்...
என் இலட்சிய நிலவு தெரிகிறது...

நிலவின் அழகு
பௌர்ணமியில் தொடங்குகிறது...
முழு நிலவின் அழகைத் தேடுகின்றேன்
மாதத்தில் ஒரு முறை தான் முழு நிலவு...
எத்தனை முழு நிலவுகளை...
முழுமையாய் இரசித்திருக்கின்றோம் வாழ்வில்...?

நிலவின் அழகுக்கு இரவுதான் காரணம்...
இரவு தீவிரமடைய தீவிரமடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நுட்பமான கிரகணங்கள் சிலிர்க்கின்றனவே...
சீ...
மனிதன் சபித்துக்கொண்டேயிருக்கின்றான்...
காதுகளை மூடுகின்றேன்...
நான் பார்க்கும் நிலா தீவிரமாக ஒளிர்கின்றது...
கண்களை இறுக மூடுகின்றேன்...
என்னுள் இசை தீவிரமாக ஒலிக்கின்றது...

முந்தானை மூடாத முழு நிலவு
நிசப்தம்... மேகங்கள் பதற்றமில்லாமல்...
ரசனையோடு என்னிதயம்
எவ்வளவு இனிமையாக வாசித்தாலும்
என் விரல்கள் மீட்டும் வீணை...
அபசுரம்தான்...
குமுறும் நரம்புகள்...
வீணையை எப்போது வேண்டுமானாலும்
வாசித்துக்கொள்வேன்...
வசதிபோல் முழுநிலவை
வாசிக்க முடியுமா?...

வானத்தை வெறித்துப் பார்க்கிறேன்...
வெதும்பும் வெள்ளிப் பூக்கள்
என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன...
நான் இறந்த பின்னர்...
அங்குதான் தொடர்ந்த இருப்பாம்...

2004



## இதய இசை

என்றோ
இசைக்கப்படாமல்
அடைத்துக்கிடந்த
என் இதயம்
இப்போது
இசைக்கத் தொடங்கியுள்ளது
அது இசைக்கும்போதெல்லாம்
என் கரங்கள்
ரணப்படுகின்றன...

என் இதயமே...!
எனது ஸ்வரங்கள்
ஸ்தாயியோடு சேர்ந்தொலிக்கும்
முகாரியை
சற்றுக் கேள்
உன்னிதயம்
'படபட' த்துத் துடிக்கும்
கண்கள்
'குபுகுபு' த்துக்
கண்ணீர் வடிக்கும்.

உன் புன்னகையில்
அழகுகண்டு
விழித்துக்கொண்ட
என் விழிகள்
இப்போது உறங்க மறுப்பது ஏனோ...?

என்
நிலை சொல்லி
கவிதைகள் வடித்தேன்
அதை நீ கிறுக்கல்
என்கிறாயே!

www.tamilarangam.net


உன்னைத் தேடுகின்றேன்
இலக்கியச் சுமையோடு
உறங்குகின்றாயா?...
உன்னிடத்தில் நான்
உலகத்தைப் படிக்க தவறிவிட்டேன்
குழம்பிய
சப்தபேதங்களாக
இன்று நான்
தவிக்கிறேன்...
உந்தன்
பார்வையோ
புன்னகையோ
பார்க்கவில்லை இப்பொழுது
அர்த்தமுள்ள கவிதையையே எதிர்பார்க்கிறேன்!...

2004



## இத்தனை நாள் எங்கிருந்தாய்....?

எத்தனையோ யுகங்களாய்
உன் அன்பு மடலை
எதிர்பார்த்தேன்
கிடைக்கவில்லை

உன்
ஓராயிரம் கற்பனைகள்
சுமந்த வாழ்வு
காற்றலையில்
அந்தரத்தில் ஆடியதை
நான் அறிவேன்...!

நிறம் மாறாத
குருதிக்குள்
எத்தனை வேற்றுமைகள்...?
என எண்ணிய காலம் ...!

உனக்கும் எனக்கும்
இடையில்...
பாதகச் சூழ்நிலையால்
இடம் மாறி
தடம் மாறிப் போன உறவு...!

நம்பவே முடியவில்லை
நேற்று உன்
தொலைபேசி அழைப்பில்
தடுமாறி விட்டேன்...

விபத்தில்
நான்...
கண்களை ...
அகல விரித்தது போல்
அதிர்ந்து விட்டேன் ...!

இத்தனை நாள்
எங்கிருந்தாய் ...?
எம் சோகத்தில்
ஏதோ இசைக்கின்றது ...!

2002

## இருட்டைறீ

அவள்
மனசு உடைந்த
உணர்வுகள் புறழ்ந்து
முறிகின்ற பேனா!
குமுறிய சத்தம் கேட்டு
நிசப்தம்
பூமியெங்கும் இருட்டு

அந்த இருளோடு மட்டுமே
உறவு என்பதால்
கூசுகிறது விழிகள் வெளிச்சத்தில்

வாழ்வின் இடைநடுவே
வழிமறிக்கின்ற சரிவுகள்
தாக்கங்களுடன்
தவிக்கின்ற மனசு
தாங்காமல் ஏற்படுகின்ற நோவுகள்
அத்தனை செயல்களும்
கழுத்துக்குத் தூக்குக் கயிறு
ஆனாலும் கலங்கவில்லை
எல்லாமே உயர்வுக்குரிய
வழிகள்தான்
சிந்திக்கும் இருட்டு
அந்த இருட்டில்
எப்போதும் ஒரு பனிமூட்டம்
விழிகளில் விழுந்து வழியும்
கவிதை வரிகளில் உலவிக் கலையும்
அப்போதெல்லாம்
இதயம் கலங்காது இதமாக இருக்கும்
உயிரிழப்புக்குச் சிக்காமல்
தப்பும் சுவாசம்
சிரிக்கிறது இருட்டு

www.tamilarangam.net


சந்தனக் கட்டைகளாகி
இருட்டை முறியடிக்கின்ற
சிந்தனைகள்
சரிந்துபோகின்ற வாழ்க்கையை
சரிக்கட்டவேண்டுமானால்- மனமே
சிக்கல்களை
மர்மமான சவால்களை
மனதோடு ஏற்றுக்கொள்
மனதையும் உடலையும்
பழுவின்றிப் பார்த்துக்கொள்
அங்கே வீறு நடை போடும்
ஈரச் சூரியன்
இருட்டு முறிகிறது!

2003



## என்னுயிர் தாய்

குடை பிடித்தாலும்
மழைச்சாரல்
நனைத்து விடுவதுபோல
நெஞ்சத்து நினைவுகளை
மறக்க நினைத்தாலும்
என்னை
நனைத்துக்கொண்டிருக்கிறதே!

என் மகிழ்வில் நீ
நீந்திக் குளித்தாய்
என் சோகத்தில் நீ
சுகமிழந்து பதகளித்தாய்
என் உயர்வுகளுக்காய் நீ
உயிர் கொடுத்து ஊக்குவித்தாய்
என் வாழ்க்கைப் பாதைகளை
தத்தெடுத்த சிகரமானாய்

என்னுள் ரீங்காரம் செய்யும்
கான இசைகளிலும்
தேடும் தேடலிலும்
ஓடும் உதிரத்திலும்
துடிக்கும் இதயத்திலும்
என்னைத் தொடும் தென்றலிலும்
நான் நுகர்ந்து முகரும்
சுகந்தத்திலும்
உன்னைக் காண்கிறேன்


என் கரம் சேர்க்கும் மலர்களிலும்
கையிலோடும் ரேகைகளிலும்
என் பாதம் போகும் பாதைகளிலும்
மீட்டு மொழிகளிலும்
கேட்கும் ஒலிகளிலும்
சுவைக்கும் நாவிலும்

சிறகடிக்கும் சிந்தனையிலும்
உன்னைக் காண்கிறேன்

நீ புயலாக இல்லாது
இனிய
தென்றலாய் என்னில் வீசினாய்!
பனிக்கட்டியாய் இல்லாது
பனித்துளிகளால்
என்னைக் குளிர வைத்தாய்!
வரட்சியாக இல்லாது
வசந்தமாக வீசினாய்!
வெள்ளமாக
வெடித்தோடாது
மழைத் தூறல்களால்
மெதுவாக நனைத்தாய்

என்னுயிர்த் தாயே!
இரவுப் பாடலாய்
என்னுள் இசைக்கின்றேன்
எனது உடல்
எனது மனம்
என்னுயிர் இருக்கும் வரைக்கும்
நிலைக்கும் எங்கள் உறவு...

2002



என் தேசத்து ஆத்மா

தீப்பிழம்பை கக்கிக்கொண்டு...
மயக்குகின்ற...
மாலைச் சூரியன் ...
பனிப்புகார் போல
மக்கி படிந்த வீதியோரங்கள்...
புகைத்து இரைகின்ற
மினுப்பற்ற வாகனங்கள்...
அங்கலாய்த்து ...
அவசரமாக...
ஏக்கம் சுமந்த விழிகளோடும்...
புழுக்களாக அசையும் ஜனத்திரள் ...
புழுதிகள் மூக்கை அரிக்கின்ற
ஓரப்புறத்தில்...
ஒற்றைக் காலுடன்
என் தேசத்து ஆத்மா ஒன்று தரையில் ...

கோரம் நிறைந்த
உருண்ட கண்கள்...
கொப்பளித்த சிவப்பு உதடுகள்...
உருண்டு திரண்டு
ஊத்தையில் புரண்ட உடம்பு
நகங்கள் நீண்டு
நறுக்காது அடைத்துக் கிடந்தது...
சணற் பஞ்சுபோல்
பூஞ்சணம் பிடித்த தாடி...
சிலந்தி தூசு விரிந்தது போல்...
புருவம் பழுப்பால் படர்ந்திருந்தது...

கறல் பிடித்த மூக்குப் பேணியும்
அசுத்தமான
அலுமினியக் கிண்ணமும்...
பரிதவித்து ...
பரிகசித்து ...



பார்வையில்... ஏழ்மையின்
பழைய ரேகைகள் படர்ந்து
பயங்கரம் பற்றியிருந்தது...

என் சிந்தைக்குள் உறைந்த
அந்த மானிட விலங்கின்
அத்தனை தோற்றத்திலும்...
அகன்ற
பார்வை பாய்ச்சும்... அந்த
ஆத்மாவின் வேய்வில் ...

எறிந்தது என் பார்வை ...
எதிர் பார்த்தது ஒரு புன்னகை
என்னிடமிருந்து ...

குமட்டலிலும்
என்னைக் குடைந்த
அந்த ஆத்மாவை
விழித்துப் புன்னகைத்தேன்

மௌனத்தைக் கலைத்து
மொழி லயத்து எழுப்பியது
மனிதத்தை நேசிக்க
குருதி கொப்பளித்து
இளமையைக் கரைத்து
ஜீரணம் அடையாது...
போர்க்களத்துப் பூக்களாக
என்னுள் பிரளயமாகி...
தணலாய்க் கொதித்து
புதைத்துவிட்டேன் என் வாழ்வை
என்றது அந்த ஆத்மா...

அவன் விசும்பலில்
மின்சாரம் பிறந்தது...

www.tamilarangam.net


விழித்துப் புன்னகைத்த
என் புருவங்கள்
சிலிர்த்து...
சுருங்கி ...
நெகிழ்ந்தது என் நெஞ்சம்

தெரியாது அந்த ஆத்மாவை
புரியாத பொழுதில்
புழுதியில் உறைந்து
யாசித்தது என் உள்ளம்

முகஞ் சுளிக்கும்
மனிதச் சடலங்களை
மீண்டும்
வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தது
அந்த ஆத்மா...

2002



## என் கண்களை விரும்பியவன்

அவன்
என் கண்களை விரும்பினான்
அவனுக்குத் தெரியுமா என்
மருண்ட விழிகள்
நெருப்பாகி... சுவாலையாகும்
கப்பலைப்போல்
கக்குகின்ற கண்ணீர்
கொட்டிக்க குவிந்த
இரத்தினங்களும் முத்துக்களும்

மனக் கற்பனையில்
மலர்வதல்ல
இயற்கை எழிலால் தூண்டப்பட்டு
பொங்கிப் பொழிவது
வாழ்க்கை அர்த்தங்களில்
கம்பீரமான பேச்சுக்கள்
காதல் பேச்சுக்கள் அந்த
கிளர்ந்த ஆசைகள் - அந்த
ஆனந்த பைரவி ராகம்
எத்தகை காந்தம்
அதுவா என் கவிதை

மெல்லிய மணலின் ஸ்பரிசம்
சுகமாயிருந்தது
நீ கருத்துக்கள் கொடுக்க
நான் கவிதையாக்கி
வீணை மீட்டியது.
பொய்மையும் பொழிந்தது
எப்போதும்
பௌர்ணமியா இல்லை
அமவாசையும் தான்

தத்துவமும் சிந்தனையும்
என் கவிதைக்கு
புதிய ஜீவன்

தனிமனிதனின் சுயநலம்
எனக்குள் புதிய வேகம்
ஜாதியும் சமயமும்
உயர்வும் தாழ்வும்
உலகில் அகண்டமாகப் பரந்திருக்கிறது
இதற்குள் உன் காதல்
அமிழ்ந்திருக்கிறது.

சல சலத்துச் சிரித்த அலைகள்
பிணைந்த அந்த அலைகள்
எனது காதல்
எனது அழிவற்ற அழகு
மாறா இளமை
உன் கவிதைக்கு
விளை நிலம்.

ஏனோ... என் இதயத்துடிப்பு
மந்தமடைகிறது
வெறியூட்டும்... அந்த
பூரண நிலவு காய்கிறது
ஆனால் உன் கவிதைகளில்
அறிவை நிரப்பிக்கொள்.
நீண்ட கைகளினால்
அழகை அளந்து கொள்.

உன் கண்கள் என்
நரைத்த தலையையும்
பல்லுப்போன



இடுப்புக் கூனிய
நிலைமையையும்
பார்க்கமாட்டாது
அகழியாகி
உணர்த்தும் இரைசல்கள்
அந்த அலைகள் என்னை
அழைக்கின்றன.

2005

## என்னைப் போலவே என் கவிதையும்

என்னுள்
எழுதி எழுதி
திருத்தப்பட்ட கவிதையின்
சில வரிகள்
கண் சிமிட்டும் குண்டு பல்பின்
மெலிந்த வெளிச்சத்தில்
வலியுடன்
கண்கள் நீராடி
நெஞ்சைச் சுட்டு
என்னைத் தூங்காமல் தடுககின்றன...

எத்தனை தடவை திருத்தி எழுதியும்
முடிக்கப்படாமலேயே
காற்றில்
பரிதவிக்கின்றன
சாளரங்கள் மூடப்பட்ட பின்னும்
முற்றுப்பெற மறுக்கின்றன - ஏனோ
சத்தங்களும் மறுக்கின்றன...

துணிவை உரியவிட்டு
வலிக்கும் மனத்தோடு
வாரிய முதல் வரியில்
பார்வை பதியும்போது
முழுமை தெரிகிறது
விழிகள்
மற்ற வரிகளை
முற்றாக அழிக்க
மனம் வராததால்
முழுமை அடையாமல்
வெகுநாட்களாய்
என் முன்னே படபடக்கிறது
என்னைப்போலவே
என் கவிதையும்

௨௦௦௪



## என் கனவில் வருவாயா...?

என் வீட்டு ஜன்னல்கள்
இறுக மூடியிருந்தும்
நடுப்பகலிலும்
எனது அறை
ஜில்லென்று குளிர்.

இடுப்பில் புதைந்து
இன்னும் உறங்கும்
என் குழந்தை

நினைவின் நீரோட்டத்தில்
நீந்தி வரும் ஒற்றைப் பூவாய்
உன் முகம் மட்டும் எப்பவும்
நினைவுச் சரத்தில் சேர்த்துக்கொண்டேன்...

இளமையின் இனிய நினைவில்
கற்பனைகளோடு
எரிகின்ற விறகாக
இன்னும் நான்...

சிதறி இருக்கும் புத்தகங்கள்
தரை எங்கும்
சிறகொடிந்த பறவைபோல்
சித்தம் கலங்கி
சிறுகினாய்...
சுற்றிலும் மனித குண்டுகள்...

பிறந்த தாய் மண்ணில்
பிரசவித்த
ஏக்கம் சுமந்த உள்ளம்...
நெருப்பான மூச்சு...!

சுரண்டல் வாழ்வில்
சுற்றித் திரியும்

www.tamilarangam.net


புல்லுருவிகளின் தாக்கத்தால்
உன் சுவாசம் தடைப்பட்டது

மரணத்தில் நின்று
மறுபடி பிறந்ததை
கவிதையில் வடித்தேன்...
ஆனால்...
கலைதாசனே!
கவிதையோ முடியவில்லை...
கண்களை இறுக்கி மூடிடும் வேளை
மீண்டும் என் கனவில் வருவாயா?...

௨௦௦௨



## என்னுள் நீயாக... என்றும் இருக்கிறாய்...

தலையில் தொப்பி...
தாவுது கழுத்தில் சிவப்பு...
தாங்கும் புத்தகங்கள் பையில்
வலித்து...
மூச்சிழுக்கும் இதயம்...
நின்று நின்று நடந்து வரும் காட்சி...
கைகள் வலுவிழந்து...
ரணப்படுகின்றன...
ஊற்றெடுக்கும் பேனாவும்
நடுங்குகின்றது...
ஆனால்
அவர் தம் நெஞ்சுறுதி
நினைக்கும்போது நெஞ்சு உருகுகிறது...
இதயம் குமுறுகிறது...
கண்ணீர் பெருக்கெடுத்து
கன்னங்கள் நனைகின்றன...

நிறுத்து! என்கிறது
உணர்ச்சி பீறும் பாசம்...
எழுத்தாளன் என்றுமே
மரணிப்பதில்லையே!
என்றும் உன் தந்தை மரணிக்க முடியாது...!

கண் விழிகளை இறுக்கி மூடினேன்
சிரிப்பலைகள் என் காதில் ஒலித்தன
என் நெஞ்சிலிருந்து சிரித்தன...
இல்லை...
அவர் உழுது விதைத்த...
நூல்கள் அத்தனையுமே
என்னைப் பார்த்துச் சிரித்தன...

உன் ஒவ்வொரு படைப்பிலும்
உன்னோடு சிரிக்கின்றேன்
உன் ஒவ்வொரு சொல்லிலும்
உன்னை நான்

## எங்கே இருக்கின்றாய்...?

எங்கே இருக்கின்றாய்...?
என்னையும் கேட்காமல்
உன்னையும் கேட்காமல்
என்னிதயம்
அடிக்கடி உன்னை வரைந்து பார்த்து
வர்ணம் தீட்டுகிறது

கடற்கரை மணலில்
உன் பெயரை எழுதமாட்டேன்
ஓங்கார அலைகள்
இரக்கமில்லாமல்
அழித்துவிடும்
தமிழ் பலகையில்
உன்னை உலர்த்தி
உரமிடுவேன்

காற்றலையில் எழும்
உன்
சில்லறைச் சிரிப்பினிலே
சிறகடித்து திரிந்து
ரை வந்து போகும்
வானம் பாடியாய்
விழுந்து விழுந்து
மறுபடியும்
எழ எத்தனிக்கின்றேன்

கவிதையில் நின்றும்
கருத்துக்கள் சொன்ன
காகிதத் துண்டுகளை
கப்பல் செய்து அனுப்ப மாட்டாயா?
கருத்துக்களால் காதலித்த
காவியப் புனல்கள்
நீர் பட்டும் அழிவதில்லை...



உன் வாயிலிருந்து கொட்டும்
வார்த்தை ஜாலங்கள்
குழையும்போது
மௌனம்
எனக்கு ஆடைகட்டி
அழகு பார்க்கின்றது...

என் தனிமை
ஒவ்வொரு ராத்திரியிலும்
என் மனப் பாதையில்
உன் நினைவுகள்
யாத்திரை போகையில்
சித்திரை வெய்யிலாய்.
நித்திரை தகிக்கிறதே. . .

2002

## எம் மண்ணின் வீரர்கள்

எம் மண்ணின் வீரர்களே!
சொந்த வாழ்வைச் சுவைக்க மறந்த
அற்புதத் தியாக விருட்சங்களே!
தாயகத்துக்காய்
தாரைவார்க்கத் துணிந்த எம்
தாய்நாடு பெற்ற செல்வக் குழந்தைகளே!
தன்னலமற்ற வண்ணக் குயில்களே!
பூப் பறிக்கும் கைகளில்
போர்க்கருவிகளை
சுமந்துசென்ற பூ விழிகளே!

உங்கள் கண் மடல்கள்
இறுகி மூடிய காலங்களை
எண்ணி எண்ணி உணர்வுகள்
கரைந்துகொண்டே இருக்கின்றன அவை
காலத்தால் அழியாத காவியங்களாகி எம்முள்
கண்ணாடிச் சிதறல்களாகி
கவிபுனைந்து கொண்டே இருக்கின்றன.
வேதனைகளையும் வலிகளையும் சுமந்து மனம்
மழையாகப் பொழிந்து கொண்டிருக்கின்றது.

காற்றைப் போல யார் கைகளுக்கும்
கட்டுப்படாத வீரச் சைகளுக்கும்
மேகங்களின் இடி முழக்கங்களோடு
முனைந்து மின்னிய பொன்னுடல்கள்...
மௌனமாகி அந்தக காற்றோடு கலந்துவிட்டனவா?
முடியாமல் அடங்கிய மேகங்கள் கூட உங்கள்
வாஞ்சை கொண்ட வீரம் கண்டு
சிலிர்த்துக் கண்ணீர் சிந்துகிறதே..!
பாலூட்டி வளர்த்த உங்கள்
அன்னை முலைகள்
நடுங்கித் துடித்துத் துவழ்கின்றனவே...!

உங்கள் மூச்சுகள் நின்றுதான் மற்ற
மூச்சுக்கள் ஒலிக்கின்றதாம்...
உங்கள் விழிகள் மூடித்தான் இந்த
உலகமே விழிக்கிறதாம்
தாய் லாந்துப் பேச்சுக்கள் இன்று
ஒஸ்லோவில் ஓங்கி ஒலிக்கிறதாம்...
வடக்கு கிழக்கும்
மலைநாடும் மன்னாரும்
சேர்ந்து அங்கே மலர்கின்றதாம்...

வீரர்களே...!
வீரம் விழைந்த எம் மண்ணில்
வரலாற்றைக் கொண்டு தூங்குகின்றீர்களா?
வீர இறுமாப்போடு தூங்குங்கள்...
நூற்றாண்டு கா லம் கடந்தாலும்
நெஞ்சத்துள் சுமந்த எம் தேசம்
நேசத்தில் நிறைந்த எம் பாசம்
வீசி எறிந்த உங்கள் வாசம்
வசந்தமாய் வீசும் எம்முள்
விண்ணோடு கலந்து நிற்கும்
எம் தேசக் காற்றோடு உங்களை
சிரம் தாழ்த்தி
நேசக் கரம் கூப்பி நிற்கின்றோம்

2002

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



என் மன அரங்கில்
உயிரைப் பிழிந்து
உடலினுள் நெளிந்து
மெத்த உணர்வுகள்
செத்துவிடும் அவளுள்
பகிர்ந்து
விழிகளில்
அந்தக் கண்ணீர்த்துளி...

சோர்வடையா ஞாபகங்கள்
சுதந்திர நினைவுகள்
மூழ்கிவிட
புதை மணற் தேசமாக
நினைவுகள் விழுங்கி
நள்ளிரவில் உறைந்து நின்று
நகங்கள் பிடுங்கி
நாதியற்ற நிலையில்
நனைக்க வரும் கண்ணீர்த்துளி...

நரைத்த சேலை
நிலவைக் காணும்
நேரில் ஏக்கம் - என்
விழிகளில் துடிக்கும்
சிவப்புகள் தெறிக்க
சிதறிய உடல்கள்...
வன்முறையால் மனித இனம்
துன்புறும் சேதிகள்
சோகத்தில் வரும் கண்ணீர்த்துளி...

பாராட்டுக்குரியவர்கள்
பாராட்டப் படவேண்டும்
ஒதுக்கிவிடும் மனிதரினுள்
மனிதப் பண்புக்கு



வலுக்கொடுத்து
வாழ்க்கையின் புகழைப்பாடுகின்ற - உன்
உணர்ச்சிமிக்க வார்த்தை கேட்டு
வாய் விட்டுச் சிரிக்கும்போது
அந்தக் கண்ணீர்த்துளி...

வேலை, கர்ப்பம், துன்பம்
ஆண்
ஆட்டுகின்ற சிந்தனையுள்
உணர்வுகள் மேலோங்க
உலகப் பெண்ணினம்
உடைந்து விடும்போது - உயிரை
உருக்கும் புகையினுள்
உதிரக் குழாய் வழியே
உதறும் அந்தக் கண்ணீர்த்துளி...

என் மனம் வெடிக்கும் போதும்
துரோகங்களைக் கண்டு விம்மும் போதும்
துயரத்தால் குருதிகள் குத்தும் போதும்
கொடுமைகளைப் பார்த்துக் கலங்கும்போதும்
வெம்மையுடன் வேதனைகள் வேகும்போதும்
சாதிக்க முடியாது இதயம் தவிக்கும்போதும்
எனக்கு ஆறுதல் தருவது கண்ணீர்த்துளி ...

காலத்தின் முகங்கள்
கரைந்து சிதையும்
தேசத்தின் காயங்கள் - என்
கனவினில் அசையும்
இறகுகள் உதிர்ந்து - என்
விழிகளில் சுழலும்
இருப்பிடம் தொலைத்து
உறவுகள் வெறிக்கும் - என்
தனிமைக்காய் இரங்கும்
அந்தக் கண்ணீர்த்துளி...

www.tamilarangam.net


அவன் என் இரகசியச் சினேகிதன்
ஆரத் தழுவி என்னை
ஆறுதல் படுத்துபவன்
அவன் இல்லாமல் நானில்லை
நானில்லாமல் அவன் இல்லை

2002



www.tamilarangam.net


## அழுதே சுமக்கின்றேன்

பிறப்பின் போதும் அழுதேன்...
பிறந்த பின்னும் அழுதேன்...
மறைந்து நின்று அழுதேன்...
மனம் வெதும்பி அழுதேன்...

நீறுபூத்த நெருப்பாய் அழுதேன்...
நேசத்தில் உரசி அழுதேன்...
நெஞ்சம் கொதித்தழுதேன்...
தெரிந்து சொரிந்தழுதேன்...

பற்றிப் பிரிந்தவரால் அழுதேன்...
பேசி மகிழ்ந்தவரால் அழுதேன்...
பாசம் வைத்தவரால் அழுதேன்...
பிரிந்து வாழ்பவரால் அழுதேன்...

உன் குரலினில் அழுதேன்...
ஊமை உணர்வினில் அழுதேன்...
உன் ஊடலில் அழுதேன்...
உளலும் ஏக்கத்தில் அழுதேன்...

என் பிரசவத்தில் அழுதேன்...
என் பரிதவிப்பில் அழுதேன்...
என் கனவினில் அழுதேன்...
என் கவிதையில் அழுதேன்...

என் உயிருள்ள வரைக்கும்...
என்னுள் அழுதே சுமக்கின்றேன்...
என்னை ஆசையாய் பெற்றவளோ...
என்னை அழுவதற்கென்றா பெற்றாள்...?

2002



## அவர்கள் பைத்தியங்கள்

எனக்குத் தெரியும்
என் பாடலைக் கேட்க
எவருமே இல்லை யென்று
அந்தத் தனிமையில்
தொண்டையைக் கிழித்துக் கொண்டு
என் செவிக்கு மட்டும்...
இனிமையாக இருப்பதால்
என்னையே மறந்து... உற்சாகமாக
பாடிக்கொண்டிருக்கிறேன்
என்ன வென்று சொல்வது இதற்கு...?
அந்தத் தனிமையில்
ஆனந்தத் லயப்புடன்
அந்தரங்கமாகப் பாடுகின்றார்கள்
ஆனால் அவர்கள் பைத்தியங்கள்!

துயரங்கள் துயரமாகி
உறக்கமின்றி... மனம் சிலிர்த்து
பெருமூச்செறிந்து கொண்டே
சூரியோதயம் வரை
விழித்துக் கொண்ட இரவுகள்...
இப்படித்தான் அவர்களும் இருப்பதுண்டு
ஆனால் அவர்கள் பைத்தியங்கள்...

சற்று நேரத்திற்கு முன்
தனியறையில் உடை மாற்றிக்கொண்டபோது
உடையற்று நின்றது நினைவிருக்கிறது
அவர்களும் தங்கள்
தனி உலகத்தில் அவ்வாறு நிற்பதுண்டு
ஆனால் அவர்கள் பைத்தியங்கள்!

அவர்கள் அழுகிறார்கள்
சிரிக்கிறார்கள்
பாடுகிறார்கள்... ஆடுகிறார்கள்

www.tamilarangam.net


பேசுகிறார்கள் . . . அன்பு செய்கிறார்கள்
நன்றி காட்டுகிறார்கள்
ஆனால் அவர்கள் பைத்தியங்கள்!

பிறருக்குத் தெரியாதவை
தெரிந்து விடுமோ. . . என்று
அஞ்சுகிற
தெரிந்து விடக்கூடாது என்றும்
ஒருவேளை தெரிந்திருக்குமோ. . . என்று
அடிக்கடி தலையைச் சொறிந்து கொள்கிற
ஆயிரம் பைத்தியங்கள் எம்மிடம் . . . ஆனால்
அவர்கள் தலையைச் சொறிந்தபோது

பெயர் சூட்டப்பட்ட பைத்தியங்கள்
ஒதுக்கி வைக்க முடிகிறது
பைத்தியக் காரத் தனத்தை
ஒதுக்கி வைக்க முடியுமா?
அவர்களின் உலகம் அற்புதமானது
ஆனந்தமான உலகம்
அந்த லயப்பில்
உன்னையும் என்னையும் மறந்து. . .



## உயிரோடு உறவாக

தேனினு மினிய உயிர்
தேன் மொழியே எங்களது
மேலான தலை மகளே
மேன்மைசேர் நாயகியே!
ஜோதிப் பிழம்பமென
ஒளி பாய்ச்சும் சித்திரமே!

என்றே எனை வர்ணித்த
உயிரான என் தெய்வங்களே!
உறவொன்றை இழந்து
உருகிடும் வேளையிலே
உயிரோடு உறவாக - மறு
உயிரினில் புகுந்தாய்

மகிழ்ந்திடம் மழலையின்
மொழியினில் நின்று
மனது நிறுத்தினேன்
கெஞ்சி வளர்த்ததை அன்று . . .!

2001

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## உயிரின் நாதம்

நெஞ்சத்து நினைவலைகள்
உயிரின் அடியிலிருந்து
எண்ணத்தின் நாதத்தில்
ஊற்றுக்களாய் பீறிட்டு
துளிர் விட்ட கனவுகள் எத்தனை!... - இன்று
சோகங்கள் போர்த்தி
சிறையிட்ட நெஞ்சுக்குள்
சிதறித் தெறித்து
மரணித்து மௌனமாகிறதே!...

விழித்தெழுந்த காலைப்பொழுதில்
பூவாய் மலர்ந்து
பம்பரமாய் சுழன்றடிக்கும்
சுவடுகளின் எதிரொலிகள்
இந்த பூமிக்குத் தெரியும்
உடலில் வலி எடுக்க
உணர்வுகள் சுகமிழந்து
துறவியின் தவம்போல்
மௌனமாகின்றதே!
என்னுடலை
குறி வைத்துத் தொடரும் அம்புகள்...
உன் விழிதான்
கூர்மையென்று வர்ணித்ததாலா
கணைகளாக்கி என் மீது தொடுத்தாய்...?
தொடுத்த அம்புகளை
தடுத்துப் பார்க்கின்றேன்
துளைத்த அம்புகளை
அள்ளி
தூரிகையால் வர்ணம் தீட்டுகின்றேன்
சாட்சிகளில்லாத சித்திரங்கள்
என்னுள்
சிரித்து மௌமாகின்றதே!



பொய்யான வாதங்களில்
பழி தீர்க்கும் வெறிகொண்டு
குருதி மழையில்
மனிதப் புழுக்களைக் கழுவிய
மனிதர்களை எண்ண
மூச்சுத் திணறுகிறதே!
மரணித்துப் போன ஆத்மாக்கள்...
மனசு கலங்கி மௌனமாகிறதே...

நெஞ்சுகள் புரளும் சோகங்கள்
உணர்வில் கொந்தளித்து
கண்ணீரால்
சிரிப்பை அணைக்கின்றதே!
மழையின் தூறுலோடு
மனதின் துயரங்கள்
மௌனமாகிறதே!
பெரு மூச்சுக்களை நுகரும்
சுவாசக் காற்றே!
என் மௌனத்தைக் கலைக்காதே...!

2002

www.tamilarangam.net




வேதனைத் தணலாய்
தீய்க்கின்ற காட்சிகள்...
உணர்வுகள் உள்ளத்தில் பாய்ந்து
வெதும்பி நெஞ்சமும் வீங்கி
உடம்புடன் சிலிர்த்து
பதுங்கியே என்னுள் மட்டும்
ததும்பின ஆடி நின்று...
பட படத்தன கண்கள்...

சுடுகின்ற ஒளி...
ஒளியைத் தின்கின்ற இருள்...
மாறி மாறி இளமை குன்றாது
வாழ்கின்ற ஒளியும் இருளும்...
காதலனைப் பிரிந்த காதலி போல்..
ஏக்கம் பிரிவுத்துயர்...
காலை வந்திடுவான்
மகிழ்ச்சி தருகின்றான்
அழகு தருகின்றான்
மலர்களும் ஆடுகின்றன
மோனத்தில் இன்பம்...

மயங்கச் செய்து
மறைந்து விட்ட அந்த ஒளி...
நிம்மதி நிசப்தம்
எண்ணித் துடிக்கும் இரவு
நீங்காத நினைவுகள்
பசியின்றி பரவசமாகின்றன...
கண்கள் களைப்படையும் வரை
கற்பனைகளால்
சுழலுகின்றாள் சீறுகின்றாள்
குமுறுகின்றாள் கலங்குகின்றாள்
எழுகின்றாள்...
மௌன மொழியோடு பேசுகின்றாள்
இரவின் ஏகானந்தத்தில் பேசுகின்றாள்
அவன் வரவுக்காக ஏங்குகின்றாள்



ஒளியே நீதான் துணை
விழிமேல் அமர்ந்த இமைபோல்
காத்திருந்து
துடிக்கின்றாள்... வரவுக்காக
காற்றே தூது செல்லாயோ!
புலம்புகின்றாள்...

பிரிந்து வாழ்வதில் இன்பம்
சக்தியின்றி சுகமின்றி
சுழல்கின்ற தேசம்
ஒளியும் இருளும்
என்றுமே ஒன்று சேர முடியாது
நியதியா?... ஆனால் ஒளியே!
நீ என் உணர்வு - நீ என் அமுதம்
நீ என் சுவை - நீ என் இன்பம்
உன் ஒளிக் கீற்று என்னில் படாதா...?
உன் இளமை என்னை வருடாதா...?
உன் அறிவும் தெளிவும்
உடலுக்கு இதமானது
வெம்மை சுடுகின்றது...

என்னுள் ஒரு சந்தேகம்
நான் உனக்குப் பகையா?
நான் உனக்கு உணவுப் பொருளா?
நாம் ஒரு வயிற்றுக் குழந்தைகளா?
கட்டி முத்தமிட்டு உன் கதிர்களால்
என்னை மறைத்து நிற்கின்றாயே!
என்னை விரட்டி விட்டு
உலகுக்கு ஒளி கொடுக்கின்றாயே!
உலகை ஆளுகின்ற உன்னை
வாழ்த்துகின்றேன் இதயத்தால்

௨00௩

## ஓ... வசந்தமே!

ஓ... வசந்தமே...!
உன் இனிய தென்றலே
என் மேனியில்
கசங்கிய இதயத்தில்
இதமாகத் தொட்டு
இனிமை தருகின்றது...

ஓ... வசந்தமே...!
உன் பூங்காவில் ...
குளிரின் அணைப்பில்...
உன்னை விடுவித்து
அழகாக மலர்ந்து
என்னை
சிரிக்க் வைக்கின்றாயா?...

சிரிப்பின் தொடர்பில்
ஒரு வாழ்க்கை
ஊமையின் உணர்வுகளை
உள் விழுங்கும்
எனக்கு
உன் வசந்தம்
கொஞ்சம்
பஞ்சாக உள்ளது...

ஓ... வசந்தமே...!
அங்கே
உன் வரவை எண்ணி
குதூகலிக்கும்
குயில்களின் ஓசை ...
குளிரில் குந்தியிருந்த
அந்த ஜோடிப் பறவைகள்
அதிகாலையில்
சிறகடித்து ஒலியிசைத்து
பறக்கிறதே...!



அந்தப் பறவைகூட
அசைந்து வந்து
என் தாய் நாட்டு
செய்தியை
இன்னிசைத்துச் சொன்னது
நின் செய்தி கேட்டு
மனம் மகிழ்ந்தேன்
பாவம்
எந் நாட்டு மக்களை
உன் வெற்றிக் காற்றால்
தழுவி விடு...!

www.tamilarangam.net




உங்களுக்கும்
எனக்கும்
நினைவுகள் மட்டும்தான்
சுதந்திரமானவை

பிறந்த மண்ணையும்
வளர்ந்த கிராமத்தையும்
படித்த கல்லூரியையும்
பிரிந்த நாட்டையும்
எப்படி மறக்க முடியும்?
நினைவுகளாக்கிக் கொண்டு
அந்நிய மண்ணை
அணைத்துக்கொண்டு
நீங்களும் நானும்தான்

மனம் இருப்பதனால்
மனிதர் ஆனோம்
சிந்திக்கிறோம்
நீங்களும் நானும்தான்
மனிதர்கள் எல்லோருமே
திறமையுடையவர்கள்
அது மறைந்து கிடக்கிறது
அவ்வளவுதான்
திறக்கவேணும்
நாங்கள்தான்

குழந்தைப்பருவம்
பிள்ளைப்பருவம்
கட்டிளமைப்பருவம்
குமரப்பருவம்
முதிர்ப்பருவம்
மனிதனின்
பரிணாம வளர்ச்சிகள்
முடிவடையும் வாழ்க்கை



பாடசாலைகள் - கல்லூரிகள்
எல்லாமே
எங்கள் வாழ்க்கையின்
பக்கங்களுக்கு
அத்திவாரமிட்டது
புரட்டிவிட்டது
வளர்த்துவிட்டது
ஒரு காலத்தில்
நாங்கள் எல்லோரும்தான்
மகிழ்ச்சியடைந்திருந்தோம்
ஆடினோம் பாடினோம்
குதூகலித்தோம்
கள்ளமாக
காதலித்தோம்
வெற்றியும் தோல்வியும் கண்டோம்
கல்லூரி வாழ்க்கையில்தான்
மரண பயம் தவிர்ந்த
சுதந்திரங்களில்
ஆனால் இப்போ
யுத்தத்தின் கொடூரத்தில்...
அதன் வெம்மையில்
மனிதம் கருகிக்கொண்டிருக்கிறது
பாடசாலைகளில் எல்லாம்
மனிதர்கள்
தொலைந்துகொண்டிருக்கிறார்கள்
உங்களுக்கும் எனக்கும்தான் தெரியும்

எனது தேசத்தின்
வடக்கில்தான் - அந்த இளவாலைக் கன்னியர் மடம்
அன்றைய காலை வேளை
கண்ணுக்கு நிற்கிறது
அந்தப் பனித்துளிகளோடு
காலடி வைத்த கன்னியர் மடத்தில்
வர்ணக் குருவிகளோடு

கண்ணில் பட்டார்
கன்னியாஸ்திரி 'லிஹோரி'
குருவிகள் என்றால்
குதூகலிக்கும் எனக்கு
கூட்டோடு குருவியாக - அந்த
வெள்ளைக்குருவியும்...
சிறகடித்த அந்த வெள்ளைக் குருவி
என்னைக் கவர்ந்தது
அழகான
அந்தத் தாமரைக் குளத்தருகே
சிரித்தா...
அந்தத் தாமரை இதழ்களைப் போல்!
அணைத்தா
உண்மையில்
உள்ளம் சிலிர்த்தது..

உரிமைகளுக்காகப் போராடி
உயிரணுக்கள்
உள்ளுக்குள்ளே எரிந்தும்
உலர்ந்தும்
மடிந்தும் எம்தேசம் - எம்
கன்னியர் மடம்
காய்ந்து போனாலும்
காகிதத்தில்தான்
கட்டிடங்கள் பார்த்து
பரவசமடைந்தேன்

கடிப்பதைக் கடித்து
உடைப்பதை உடைத்து
மிதிப்பதை மிதித்து
எஞ்சியதைத் துப்பட்டும்
எல்லாமே எங்கள் நிலங்களுக்கு உரமாகட்டும்!



நிழல்தரும் அந்த
'மகோக்கனி' மரத்தின்கீழ்
நீங்களும் நானும்தான்
நிம்மதியாக இருந்தோம்
வகுப்பு ஐந்து
நினைவிற்கு வருகிறது.

'மினோ' என்ற
மெல்லிடை நண்பியை
முதலில் கண்டேன் அங்குதான்
லண்டனிலும்
அவள் மென்மையும்
மௌனத்தின் புன்னகையும்
அப்படியேதான் - அப்போது என்
அருமை நண்பிகள்
சித்திரா வசந்தி றூபி
என் தந்தையின் நாவலிலும்
வலம் வந்தவர்கள்
வாசித்து நானும் விசனித்துக்கொண்டேன்!
அவர்கள் படித்தார்களோ எனக்குத் தெரியாது
இப்படி இப்படி எத்தனை நினைவுகள்!

மதியென்றால்
ஒன்றுதான் வானித்தில்
லண்டன் வானில்
இரு மதிகள்
உலாவுவதைக் கண்டேன்
மலர்ந்த முகங்கள்
சிந்தனை விருட்சங்கள்
உள்ளமும்
உணர்வுகளும்
விழிவை நோக்கியதாய்
நாளை
எம் கல்லூரிக்கு

www.tamilarangam.net


என்ன செய்யலாம்?
எங்கள் பங்களிப்பு
அவசியம் என்பதாய்
தொலைப்பேச்சுக்கள்
அற்புதம்!
மனித நேயத்தின்
மற்றுமொரு வடிவம்
மகிழ்ந்துகொள்வேன்
மடத்தில்
அனாதைச் சிறுவர்கள்
'மதி' கரைந்துகொண்டாள்
மனதுகள் அழுதன...
செய்திகளை
ஜெய-மதியாலும்
மதியாலும் ஒளிர்வதைப் பார்த்தேன்!

அன்றைய நினைவுகள்
எப்பொழுதும் வந்துபோகும் எனக்கு
எங்கள்
அதிபரின் காரியாலயத்திற்கு
பக்கத்தில்தான்
சுவையான மாமரம்
அதற்குப் பக்கத்தில் ஜம்புக்காய் மரங்கள்
ஏனோ தெரியவில்லை
வருகிறாள் நினைவில்
சந்திரிக்கா!
தப்பு வேண்டாம்
ஜனாதிபதி சந்திரிக்கா அல்ல

பண்டத்தரிப்புச் சந்திரிக்கா
சுட்டிதான் அவள்
சுருட்டி வரும் மாங்காயை
சுவைத்து மகிழ்வோம்
கள்ள மாங்காய்



என்ன சுவையாக இருந்தது தெரியுமா?
இன்று அதுபோல் சுவையே இல்லையே!
சந்திரிக்காவை நான் சந்திக்கவில்லை
எங்கிருந்தாலும்
சுகமாக இருக்க வேண்டும் அவள்!

திறந்த மேடையில்
கலை நிகழ்ச்சிகள்
ஆங்கிலம் - தமிழும்
கலந்து மணக்கும்
நாடகங்கள்
காதுக்கு இனிமையூட்டும்
கானமழைகள்
எம் கல்லூரி
வரிசையோடு - அந்த
வாத்தியக்கோஷ்டி
நாம் அந்த நீலத் தொப்பிகளோடு
என்ன அழகான
அணிவகுப்பு ஆடி ஆடி...
நினைவுக்கு வருகிறது...
'எட்னாக்கா' என்றால்
எனக்குப் பிடிக்கும்
வளர்த்துவிட்ட ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும்
வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

வலைப்பந்தாட்டம்
வளைந்து வளைந்து 'யூலி' அக்கா
நளினமாகத் தெரியும் 'நளினியும்' 'ஜெம்மாவும்'
குதித்துத் திரியும் 'குயிஸ்ராவும்'
செல்லமாகச் சிரிக்கும் 'செல்வதியும்'
கலகலத்துக்கொண்டு
நான் ரசிக்கும் 'ஹோகினி'
இன்னும் எம் பள்ளித் தோழிகள்...

துள்ளித் திரிந்தோமே!
எல்லாம் உங்களுக்கும்
எனக்கும்தான் நினைவிருக்கிறது!

ஒழுக்கம் ஒழுங்குகள்
ஆங்கிலத்தில் முழக்கம்
அற்புதமான சொல்லொழுக்கில்
அலாதியாக சொற்பொழிவா
அவதான் எங்கள் அதிபர்
'லூசிலா' என்ற கன்னிகை
காணலாம் என்றிருந்தோம்
ஏதோ தடைகள்
விரைவில் சந்திப்போம்

அமைதியும்
அழகான
அன்ன நடையும் சேர்ந்து
அவ பாய்ச்சிய ஆங்கிலம்
அடிக்கடி நினைப்பேன்
அருகில்தான் அவவும் Mrs. Kumar

நாங்கள்
உள்ளன்போடு பழகவேண்டும்
உண்மையாக இருக்க வேண்டும்
மனது திறந்து பேச வேண்டும்
போலி ஆபத்தானது ... ஆனால்
நாங்கள்
அப்படி இல்லைத்தானே!

இனிமேலும் இனிமேலும்
இளவாலைக் கன்னியர் மடம்
ஓ.. அந்தக் கன்னிகையாக?
அவள் அன்பின் சுரங்கம்



அவள் அறிவின் ஊற்று!
இன்றுபோல் என்றும் நினைக்க
மனம் திறந்து வாழ்த்துகின்றேன்.


௨00௪

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## நினைத்துப் பார்க்கின்றேன்

பக்க உச்சி பிரித்து
பக்குவமாய் பின்னலிட்டு
பருவம் அறியவில்லை
பருவ மங்கை ஆகவில்லை
பாடசாலைப் பாதையிலே
பாதியிலே வழி மறித்து
பக்குவமாய் பரிசளித்த
சிவப்பு நிற றோஜாவை
பதிலேதும் கூறாது
பார்வை தானும் விழுத்தாது
பாதிக்கண்ணால் பாயவிட்டு
பதுமையுடன் நான் அணைத்த
பாசத்தின் றோஜாவை
பல காலம் பாதுகாத்த
உருவிழந்த றோஜாவை
நினைத்துப் பார்க்கின்றேன்.

2002



www.tamilarangam.net




இங்கே
செயற்கையாய் செய்து வைத்த
மலர்களின் வண்ணத்துள்
நசிந்து கொண்டிருக்கும்
சுவாச நாளங்கள்

என் வீட்டு செம்பரத்தையின்
சிவந்த சிரிப்பும்
பந்தலில்
மல்லிகையின் நறுமணமும்
கொஞ்சித் தழுவிய
வேப்பங் காற்றும்
செல்ல மொழியோடு
கிள்ளி விளையாடிய - என்
பச்சைக் கிளியும்
குள்ளத் தனமான
கொழுத்த காக்கையும்
சங்கிலித் தொடராய்
சிந்தனைக் கிளையில்
செடித்துப் புன்னகைக்கும்
ஈரம் படிந்த
குளிர் காற்றுக்குள்
சுழன்று மறையும்

வீட்டுக் கோடியில்
சேவலின் கூவலும்
தோட்டக் குயிலோசையின்
ஸ்வர ஸ்தாயியும்
எல்லாம் இந்த
அலங்காரக் கூட்டுக்குள்
அகதிகளின் அவலங்களில்
தூர நினைவுகளால்
தோல்களில் வதங்கும்



எஞ்சும் விடிவெள்ளிகள்
சுதந்திரமாய் பறப்பதற்கும்
வானமில்லாமல்
காரமான மதுவெறிபோல்
மேலோங்கிக் கிறங்கும்...

நான் பிறந்து அளைந்த மண்
மாடு வண்டி தள்ளிய மண்
என் மக்களுக்கு
உணவு கொடுத்த மண்
கை கால் சிவந்து
கலப்பை உழுத மண்
பட்டை கட்டி துலா மிதித்து
நீர் இறைத்த மண்
பசுக்களும் ஆடுகளும்
பாடி மேய்ந்த மண்
துப்பாக்கி இல்லாது
சூரியன் சுட்டுக் கொதித்த மண்
மரிக்காத மாலையில்
மறந்திடுமா
என் மண்ணின் வாசம்...

இன்று
பங்குனி மாதப் பனிக்கு
சொண்டுகள்
வெடித்துப் பிளந்த படி
மனிதச் சுமைகள் மெலிந்து
வெறிச்சோடி மறைந்த படி
இலையுதிர் காலத்து
ஈசல் பூச்சிகளாய்
உணர்ச்சிகள் உள்ளடங்கிய படி
உதிரக் கசிவுகளில்
இரவுகள் இசைத்தபடி

www.tamilarangam.net


நெஞ்சம் நெருடி
நெருப்பு
விழிகளில் ததும்பிய படி
எல்லாம் எல்லாம்தான்
எப்போ
எங்கள் கனவுப்பூக்கள்...?

2005



## நெஞ்சின் கீறல்கள்

வாழ்க்கையின் பக்கங்கள்
புரண்ட போது
நெஞ்சின் முடிந்து வைத்திருக்கும்
கொல்லும் கீறல்கள்
அடம்பன் கொடி போல் சிக்கி
அருவியாய் வழியுது கண்ணில்!
என்னில் உன்னை சல்லாபஞ் செய்ய
நீயோ...
கணையாய் பாய்ந்து வலித்து
சித்திரவதை செய்கிறாய்
சோர்ந்து சிலையாக மாறிய என்னுள்
விரிகின்ற வாழ்வின் தரிசனங்கள்!
நீயும் நானும்தான்
உலகென்று நினைக்கிறேன்
உன்னோடு கலப்பதற்கு
ஒதுங்குவேன் என்னுள் ஊமையாய்
பிறந்த தேதி
பறைசாற்றி
உழன்று
உருக்குகின்ற உடம்பு
மடக்கி
மயக்கம் மனம்!
வாழ்வின் சுழற்சியில்
நிராசைகளும் நம்பிக்கைகளும்
கனவுகளும் கண்ணீரும்
ஏக்கமும் துன்பமும்
வெற்றியும் தோல்வியும்
ஜனனமும் மரணமும்
நியதியாய்ப் பதிகின்றதே!
மானிடப் பிறவிகளே
இயங்கும் வாழ்க்கையில்
முதுமை வருவதில்லை - உன்

www.tamilarangam.net


எண்ணங்கள் இளமையாய்
இருக்கும் வரை
நீ முதுமை ஆவதில்லை
மனங்கள் இளமையாய் உள்ளவரை
உடலில் வலிமை சோர்வதில்லை!

2003



## நீளும் நினைவுகள்

எரி மலைகளுக்கிடையில்
தத்தளிப்பதாக உணர்கிறேன்
கடல் கொந்தளிப்பது போல்
என் உடலும்...
பூகம்பப் புழுதியில்
புதைந்து திணறுவதுபோல்
மூச்சுத் திணறுகிறது... ஆனால்

உன் நினைவலைகள் மட்டும்
என் நினைவுகளில்
பறந்து திரியும்
வண்ணத்துப் பூச்சிகளாய்
வலம் வருகிறதே...
என்ன செய்ய என்னை
எத்தனை நாளாய் உருக்க...

மனிதம் அலையும்
இந்தப் பூமியில்
என் காயங்களுக்கு
மருந்திட நேயம் தேடுகின்றேன்
மனச்சாட்சியில்லாத
மானிடர்களுக்கு நடுவே
வக்கிரமாகிறது அன்பு

எனக்குள்ளே நான்
துவண்டு
ஒழிந்து போகும் போதெல்லாம்
உன் அண்மித்தலுக்காய்
என் இதயம் அழுகிறது
கரங்கள் நடுங்குகின்றன
நினைவுகள் நதியாக
நீண்டு தொடர்வர் போல்...

www.tamilarangam.net


என்ன காரணம்
ஏதென்று நானறியேன்
என் வான் வெளியில்
நீதான் என் கதிரொளி
இமை வெட்டாது
உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்
இடை வெளி இல்லாது
உன்னைப் பற்றிக் கொண்டிருக்கிறேன்

நீ இல்லாது - உன்
நினைவுகள் மட்டும் எதற்கு என்று
நித்தமும் நினைப்பதுண்டு
ஆனால்
மின் மினுக்கும் நட்சத்திரங்களில்

உன் முகம்தான்
என் வெள்ளி நாணயம்
என் நெஞ்சத்தில்
நினைவுப் பால் சுரந்து
என் பசி பறந்து போகிறதே!

என் மேல் இமை
கீழ் இமையை
முத்தமிட்டு மூடும் போதெல்லாம்
உன் நினைவுகள்
ஊர்ந்து திரிகின்றனவே
நித்தம் தரும் உன் நினைவுகள்
நனவல்ல என்பது மட்டும்
எனக்குத் தெரியும்!

2003



## நானும் அனாதையானேன்

லண்டனில் இருந்துதான்
அவளுக்கு அழைப்பு
இலங்கையால் திரும்பியதால்
இனிமையாம் பரபரப்பு

இருபது வருடங்களாம்
இடங்களே மாறியதாம்

இருந்த ஊர்களெல்லாம்
புல்லும் புதர்களாம்
வாயில்லா வயல் வெளிகள்
வளம் சிதைந்து விட்டதாம்
காடுகள் மாதிரி
கருகிப் போய் நின்றதாம்
காகங்கள் கரைஞ்சதாம்
நெஞ்சே உறைஞ்சதாம்
பனை மரங்கள் எல்லாம்
தலை முறிஞ்சு அழுததாம்

கொழும்பில் கட்டிடங்கள்
குட்டியாய்த் தெரிந்ததாம்
காசுதான் வேணுமாம்
களம் முட்டச் சுவைத்ததாம்
கொடுமையாய் வெய்யிலும்
கொட்டித் தீர்த்ததாம்
வடிஞ்சு ஊத்துமாம்
உடம்பெல்லாம்
புழுக்கமாம்
உருண்டு புரண்டாலும்
சுகம் ஏதும் இல்லையாம்

எங்கள் ஊர்களிலும்
'புல்டோஷர்' உருண்டதாம்

பள்ளமும் திட்டியும்
றோட்டுக்கள் இருந்ததாம்
போக்கு வரத்துக்கள்
மாறாகக் கிடந்ததாம்
பிரயாணம் செய்தால்
எலும்புகள் நொறுங்குமாம்
வாகன நெரிசலில்
முட்டித் தொலைத்ததாம்
முழித்துப் பார்த்திட்டால்
மன்னிப்பும் இல்லையாம்
ஒழுங்காக இன்னும்தான்
ஒன்றுமே இல்லையாம்

வயிறுகள் ஒட்டிய
மெலிந்த மனிதராம்
கிணறுகள் வண்டியும்
வற்றி வெடிக்குதாம்

பாமாலைப் பகுதியில்
பயமின்றிப் போனதாம்
திருவிழா எல்லாமே
ஒழுங்காக நடந்ததாம்

தமிழ்த்தேசம் எங்கும்
சிங்களம் ஒலித்ததாம்
விடுதலை மூலவேர்
தூக்கத்தில் முழித்ததாம்

என் ஊரைப் பார்க்க
எனக்கும்தான் ஆசை
எல்லாமே எனக்கு
நிறைவேறா ஆசை!
அதென்ன அந்த



ஏ-9 பாதை
அதாலை போக
எனக்குப் பேராசை
எங்கள் ஊர்க் கேணியில்
குளிக்கவும் ஆசை
கடலோர மணலிலே
புரளவும் ஆசை
அங்கிருக்கும் ஆட்களுடன்
கதைக்கவோ ஆசை ... ஆனால் ...
எப்படித்தான் நான் போவேன்?-என்
ஊர் தானே இல்லையாமே!...
நானும் தான் அனாதையாச்சே!

2004

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



விஞ்ஞான உலகம் இன்று
வீறு கொள்கின்றதே பெண்ணே!
பெண் மேதைகளை
வரித்த இந்த உலகமே!
பாரதியார் பெற்றெடுத்த
அறிவு கொண்ட புதுமைப் பெண்ணே!
இன்னும் விந்தைதான்
சொல்லம்புகள் துளையிட
இரத்தம் கசிந்துருகி
பொசுக்குகின்றாயே உன் இதயத்தை..

ஈட்டி துளைக்கும் இதயங்களை
வாட்டி வதைக்கும்
அந்தரங்க ஆசைகளெல்லாம்
ஓசைப்படாமல் - உன் மூச்சுக்குள்
அடங்கிப் போகின்றனவே

மானத்தின் மோசத்தாலும்
மார்க்கத்தின் பேரிலும் மௌனித்து
முடங்கிப் போகின்றாள் பெண்...

பருவக் கனாக்களுக்குள்
பஞ்சாக உருகும் கணங்களிலும்
அவளின் கோரப்பசி
பெருங்குடலை
சப்பிக் குதறிக் கொண்டிருக்கிறதே...!

அவள்... சாவின் உடல் சுமந்து
சாக்கடைகளாகி துர்நாற்றம் வீசி
பட்டை வயிறும்
பசையுலர்ந்த மார்புகளும் தெரிய
பிச்சைக்காக ... விழுந்து கிடக்கின்றாளே!
அவளின் கற்பு...?



மனிதனுக்கான நற்பண்புகள்
பெண்களுக்கு மட்டுந்தானாம்
கற்பும்... விட்டுக்கொடுப்பும்...
பொறுமையும் ...
வாழ்வின் மனித குலத்திற்கே - இதனை
மறுப்பதேனோ ஆண்கள்...?

காதலுணர்வு
ஆணுக்கும் பெண்ணுக்கும்
ஆளுகின்றது உலகில்
வக்கிர புத்தியின் வலிமையால்
பாரினில் பெண்கள்
காதல் என்னும் மாய்தலில்
ஏ மாறுவதும் ஏனோ...?
விழிகள் வற்றாது
வெகுநாளாய் ஓடுகின்றது
கருத்துக்கள் மாறுபட்டு
கணவன் மனைவியர்கள்
கல் நெஞ்சு படைத்து
கடுஞ்சமர் புரிவதேனோ...?

கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்
என்ன இது தாரக மந்திரம்...?
செபித்தபடி... கண்களில் மட்டுமல்ல
மனதிலும் சுமந்தபடி
சாகிறார்களே இந்தப் பெண்கள்...!

பிறப்பது முதல் இறப்பது வரை
பெண்ணே உன்னை
பற்றிப் பிடிக்குதே...! - இந்த
பாழடைந்த பிசாசுகள்...

www.tamilarangam.net 

யதார்த்தமான வாழ்க்கை
வளர்ந்து வரும் நாகரிகம்...
வீறு கொண்ட விஞ்ஞானம்...
வளர்ந்து வந்து போதும் - ஏன்
இன்னும் அடிமை அவள் - இந்த
ஆணினது வாழ்வில்...?

தாய்மையின் உயர்வை
உள்வாங்கத் தயங்கும்
தனிரகம் இந்த ஆண்கள்...!
இன்றைய பெண்கள்
அன்றைய சீதைகளல்ல
பெண்ணின் யாசிப்புகளை
நேசித்து அடைவதில்லை

பார்வையில் அனல் பரப்பி
சுட்டெரித்துத் தீக்கிரையாக்கும்
இந்தப் பெண்ணின்
சமத்துவம் எங்கே...?
நவீன சிந்தனைகள்
சீர்குலைந்து விட்டனவா...?

அடிமைப் பித்தர்களை
அழித்தொழித்து - அறிவு கொண்ட
ஆணும் பெண்ணும் - சரி
நிகரெனக் கொள்வோம் - நாம்
அஞ்சாது போராடுவோம்...

2003



www.tamilarangam.net


## முகவரியில்லாத சிற்பம்

இயற்கை நீர் இருக்க...
இயந்திரமாய்
வியர்வை நீர் பெருக்க...
இன்றும் அடிமை போல் உழைக்கும்
மலையகத்து மாதே! - உன்
நலிந்த கரங்கள் படைக்கும்
சிவந்த சரித்திரங்கள்
சரிந்து போவது ஏனோ?...

தோட்டத்துத் தொழிலாளி
என்பதைக் கேட்டாலே
முகஞ் சுளிப்பவர் உண்டல்லோ
உருகுகின்ற உண்மை
பஞ்சம் பிழைக்க வந்த
பரம்பரை மக்கள் என
பரிகசிப்பதுவும் இன்றுமுண்டு

உன் இடைகொண்ட
உடை மீது
படங்கொன்றைக் கட்டி
கைவளையல்கள் ஒலிக்க
உடைபோட்டு மடித்திட்ட
தலை மீது கூடை
தடியொன்று கொண்டும்
தேச் செடியை
தளிர் கிள்ளும் கையிரண்டும்
சதிராடும்
உன் எழில் கொண்ட வதனத்தை
மறைந்திருந்து பார்த்தேன்
சீக்கிரமாகத் தலைவர்
கடமைக்கே அழைக்கும் ஒலி கேட்டு
ஓடித் தொழிலாற்றுவதைப் பார்த்தேன்
நெடுந்தூரம்... படுபள்ளம் என்றும்...



நின்றேதும்... நினைக்காது...
விரைந்தோடிச் சென்றதைப் பார்த்தேன்

தேயிலைச் செடிக்குள்
உன் இரத்தமும் உயிரும்
உரமாகும் துயரம் பார்த்தேன்

பாவம் எழில்கொண்ட இளமங்கை
கழுத்துவலி கிள்ளத் தினம்
கடமை செய்கிறாளே
கவலையும் கொண்டிருந்தேன்
குருதியைக் குடிக்கும்
கொடிய அட்டைபோல்
கூடை சுமக்கும் - உன்
குரலைக் குடிப்பதேன்
போராட்ட வாழ்வில் - நீ
பீரங்கி முனையில்
பரிணமித்த அடிமைத் தன முத்திரை
தினக்கூலிப் பாவி முகவரியில்லாச் சிற்பம்

நூற்றாண்டு காலமாய்
அடிமை வாழ்வின் அவலத்தில்
மாடாய் உழைத்து
மண்வெட்டியாய் தேய்ந்துபோன
உன் வாழ்வு
இன்னும் மாறா திருப்பதேன்?

2002

www.tamilarangam.net


சிதறும் குண்டுகளில்
வெடித்து வீசிடும்
தீப் பிழம்புகளை அணைத்திடவா
வானமே அழுது மௌனமானாய்!

கண்கள் பெருகி ஓடி மாய
அழுது அழுது நிலமும் தேய
உருகி உருகி ஓடாய்த் தேயும்
என்னை
உளவு பார்க்கவா?
வெண்ணிலாவில் தூவ நின்று
மௌனமானாய்?...

பாலை வனங்களில்
பாதைகள் அமைத்து
உயிர் நரம்புகளில்
நாதங்களை மீட்டி
மூச்சுக் காற்றினில்
மின் விசிறிகளைச் சுழல விட்டு
உலகையே பந்தாக
உருட்டினேன்...
ஏன் பாகாய் உருகிவிட்டு
பதுமையாய் மௌனமானாய்...?

உன் நினைவுத் துளிகளால் - என்
நெஞ்சுக் கடிகாரத்தின் அசைவுகள்
கணப் பொழுதுகள் செக்கன்களாகி
நிமிடங்கள் மணித்தியாலங்களாகி
யுகங்களாகும் வேளை
என் சுழலும்
வேகத்தைக் குறைக்கவா
மௌனமானாய்...?



வாழ்க்கைப் புத்தகங்கள்
ஒவ்வொரு அத்தியாயங்களாகின்றன...
அவை காகிதங்களாக இருந்திருந்தால்
கிழித்து எரித்திருப்பேன்
கருத்துக்களின் காவியங்களாகி
கண்ணீராய்ப் பெருகுகிறதே!
கனவுகளும் கானல் நீராகிவிடுமா?
என்ற ஐயத்தில் தானா நீ
மௌனமானாய் ?

2003

www.tamilarangam.net


சிறு விளக்கின் அணைப்பில்
எனது அறைக்குள்
மெல்லிய இருட்டு... அந்த
எண்ணெய் விளக்கின் கருமை
சுவரில் பதிவது போல்
மனதில் உறுத்தும் மாறுதல்கள்... என்
உடலில் அப்பிக்கொள்கிறது!

மாறுதல் என்பதே
மாறாத தத்துவம் ...

முகர்ந்து பார்க்கிறது இதயம்
மலர் இதழ்கள் உதிர்வது போல்
உணர்வுகள்...
அறுவைச் சிகிச்சையில் என் இதயம்...
உலக மாற்றத்துள்
உடம்பு மச்சைகள்
வியர்வைத் துளிகளாகி
துவாரங்களை அடைத்து குறுக்கும் நெடுக்குமா
சுகமான சிலுவை... எமது
பூமியின் மாற்றத்தில்
புலம் பெயர்ந்து நாங்கள்
பூத்த மலர்கள்...
அறுந்த உறவுகள்
அலைந்து தொலைந்த வாழ்க்கை...

மனித மாற்றத்துள்
முறித்து வலிக்கும் என்னுடல்...
முகத்துக்கு மெருகேற்ற போலி
அலரிப் பூக்கள்
பரிசுகள் கிடைக்கிறதால்
பிறரின் வலியை
எப்படிப் புரிய நான்...?



என் வீட்டுச் சுண்டெலிகள்
வளைகளை விட்டு
வெளியேறிவிட்டன...
கூண்டுக்குள் போகாமல்
கோழிக்குஞ்சுகளும்
அடம்பிடித்தன...
சிட்டுக்குருவிகளும்
மிரண்டு போய் பதுங்கிக்கொண்டு...
கலவரமடைந்து காட்டுக்குள்
கடித்துக்கொண்ட பன்றிகள்...
பூனை மீன்களுக்கும்
நதி பிடிக்கவில்லையாம்
தரைக்குப் பாய்கின்றன...
தடுமாறி
அங்கேயும் இங்கேயும்
ஓடுகின்ற மான் குட்டிகள்...
சத்தம் ஒரே சத்தம்
கூண்டுப் பறவைகள்
கூட்டமாகச் சேர்ந்து கொண்டு...

மண்ணில் இருந்து
மாறி வந்த
மண்டையோடு
பல்லை இளித்துச் சொன்னது
'கலை கலாச்சாரம்
கோபம் வேகம் ...'
எல்லாமே எங்களுக்கு
மாறித்தான் போய்விட்டது..

2005

www.tamilarangam.net




அந்த மூடநம்பிக்கைகள்...
எல்லாமே
மனிதனின்
அறியாமைப் பயங்கள்
பெற்றெடுத்த பிள்ளைகள்

மனிதன்
உள்ளது உள்ளபடி
சிந்திப்பதுமில்லை...
பேசுவதும் இல்லை
கற்பனையை கட்டியபடி
சதிராடும் சிந்தனை ...

அடக்குமுறைகளும்
சுரண்டல்களும்
பெரும் கொடுங்கோல்
பொங்கித் திரண்டு
பொசுக்கித் தீர்க்கிறது

வழி வழியாய்
உழைப்பை வெறுத்து மற்றவர்
உழைப்பில் வாழும்
உலுத்தல் கூட்டம் ...
மனிதன்
அறிவுக்குத் தளையிட்டு
அடிமைகளாக்கி
பொய்களை விரித்து
புலன்களை மறைத்து
முடிவின்றி நசுக்கும் பெரும்
பெருச்சாளிகள்

நீயும் மனிதன் தான் ...



நாயினும் கீழாய் நின்று
நலியும் மனிதனின் அந்த
பெருமூச்சின் வெப்பம்...

உலகப் புரட்சி பெற்றெடுத்த
உலக அறிவியல்கள்
மாபெரும் சாதனைகள்
மீண்டும் உயிர் பெற்று
மந்திரமாய் ஒலிக்கும்...

உன் உதிரம் சிந்திய
உழைப்புக்கள்
உயர்ந்து எழ
உலகில் நிமிர்ந்திடுவாய்!
உலகத் தொழிலாளர்களே!
தோலுரிக்கப் பார்க்கும் இந்த
கலியுகக் கோட்டைகளை
கொமின்ரோன் வாதத்தால்
கொன்று குவித்திடுவாய்...

பேரினவாதிகளின்
பெரும் நோக்கங்களை
பேரிடியால் உடைத்திடுவாய்!
சுரண்டல் வாதிகளின்
சொப்பன வாழ்வுகளை
சளையாது போராடி
சரித்து வீழ்த்திடுவாய்!

சிவந்து கொப்பளிக்கும் உன்
மரத்த கரங்களால்
முதலாளி முத்திரையை
கிழித்து மாற்றிடுவாய்!

வாழ்க தொழிலாளர்களே!
வாழ்கக் உங்கள் கரங்கள்!

௨003

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



நம்பிக்கையில்லாத அந்த
ஆலயங்களை விட
கல்லறைகள் புனிதமானவை...
வாழ்ந்து கொண்டிருப்பவர்களை விட
மரணித்துப் போனவர்கள்
புனிதமானவர்கள்...
பூமியில் பிறவாத
மனிதப் பிறவிகளே...!
புவி மீதில் பிறக்காத வரம் என்ன?
சொல்லமாட்டீர்களா...?

எனக்கு
நிறையப் புத்தகங்கள் தேவையாகவிருக்கிறது
தூக்கத்தைக் துரத்த...
நடு இரவில்
எனக்கு மட்டும் சூரியன் உதிக்கிறான்
சூரியன் உதிக்கும் பொழுது
இருள் தோன்றுகிறது...
விழித்துக் கொண்டு
கனவு காண்கிறேன்... என்
பிரிய உறவுகள்
பரிவுடன் நினைவுக்குள் வருகின்றார்கள்...
தாயிடம் பால்குடித்த நான் எங்கே?
தந்தையோடு தாவித் திரிந்த நான் எங்கே?

கடந்த கால ஞாபகங்கள்
கண்முன் விரிகின்றது
என்னை நான் யார் என்று
நானே கேட்டு
கோபம் கொள்கின்றேன்
கோபத்தில் சிரிக்கின்றேன்

காரணம் இல்லாமல்
கண்ணீர் வரும் கோலங்கள்



கரவொலி இல்லாத நாடகங்கள்
காலியாக இருக்கும் மேடைகள்
கருத்துள்ள குழந்தைகள்
கருவில் சிதைந்து போகின்றன...
கடுமையான மரம் வெட்டப்பட்டு
கீழே காத்திருக்கும் பிரளயம் - என்
எண்ணத்தில் முகம் காட்டுகிறது
ஞான கோபுரத்தை
எழுப்பிக் கட்டுகிறது...

கூர்மையான ஆயுதங்கள்
குவியக் குவியத்தான் நாட்டில்
குழப்பம் ஏற்படுகிறதா?
தூய்மையான மூலப் பண்பிலிருந்து
விலகிச் செயற்படும் போதுதான்
துயரங்கள் தூவுகின்றனவா?
தோற்றங் கொள்ளாத காட்டுக்குள்
தொலைந்து போய் நிற்கின்றேன்
தவிக்கிறது தன்னகம்
தளர்ந்து மௌனமாகின்றது
அடி மனசின் அழுகைக்குரல்
ஆழமாய் அசைகின்றது
மாயை பிடித்த மனதிற்குள்
மரணித்துக்கொண்டிருக்கின்றேன்...
உயிரைத் தின்பதுபோல்
வலிக்கின்றது
அதுதான் மரணத்தின் வாசலா...?

2003

## மறக்க முடியாது

என்னால் உன்னையும்
உன்னால் என்னையும்
மறக்கமுடியாது!
நெஞ்சத்து நிஜங்களை துறந்துவிட்டு
மௌனம் நெஞ்சத்துள் உறங்கிவிடுகிறது
அழுகின்றபோது ஆறுதல் தருவதுதான் காதல்
வாழ்கின்றபோது சாகிறது உள்ளம்!
கட்டி அணைத்து முகம் நனைத்தாய்
அஞ்சி அர்த்தமற்ற அனாச்சாரம் என்கிறாயே!
உன்னை நினைத்து
முள் விரித்துத் தூங்கப் பழகிவிட்டேன்
நான் செல்லும் பாதையில்
நீ முள்ளாய் இருக்காதே
ரோஜாவாய் இரு!
என் பயணத்தில் நீ
மௌனக்கச்சேரியாய் அரங்கேறு
கண் கசிந்து அசைவாய்
என் சிணுங்கல்கள்.

அதிர்வால் ஒலித்துக்கொண்டிருக்கும்
சூரியனைப்போல சுடராய் வீசும் அறிவின் ஒளி
அலங்கரிக்கிறதே ஆத்மாவின் அந்தரங்கங்களை!
உன் நினைவுப் பூக்களை உதிரவிட்டு
உன் புன்னகைப் படிவுகளை படரவிட்டு
சிந்தனையில் திமிறி விழும் மூச்சசைகளால்
குடிசையமைத்து குந்தியிருக்கிறேன்
மாறி... மாறி... தடுமாறுவது
உன் சுவாசம் மட்டுமல்ல
உன் உயிர் பிழிந்த நினைவுகள்
உயிர் மடிந்து போகுமுன்
என் மூதமைக் காலத்திலும் – அவை
எனக்கு மருத்துவம் செய்யும்!

2003



## மன நோய்

அதிக வேலையாக இருக்கவேணும்
பலம் முழுவதையும் உபயோகித்திருக்க வேண்டும்
எனக்கு
அளவுக்கு மீறிய மன அழுத்தம்
வைத்தியரிடம் சென்றபோது
அறிவுரை கூறினார் - ஆனால்
கட்டாயப்படுத்தவில்லை
அவசரப்படுத்தவில்லை
நீயே தெரிவு செய்யவேண்டும்
மனோ தத்துவ வைத்தியரை...

அந்த அறையின்
பழைய படங்களும்
பழைய புத்தகங்களும்
தண்டனை விதிப்பது போலிருந்தது
மன்னிக்கவும்
உன்னைக் குளப்புவதற்கு
என்னுள்
திக்கிப் பேசும் பேச்சையும்
சமாளித்துக்கொண்டேன்
அந்த மெல்லிய வெளிச்சம் நிறைந்த
வரபேற்பறையிலேயே
சிந்தனை மாற்றம் பெற்றது
மனதில் அமர்க்களம்
எதனையுமே இழக்கப்போவதில்லையே
மனது நினைத்தது...
ஒரு சுத்தியல் அடிக்கிறது
நிட்சயமாகத் தெரிகிறது
எனது தலையின் உட்பாகத்தில்

அமைதியில் படுத்திருந்தேன்
என்னையே கேட்டுக்கொண்டேன்
உனக்கு ஒரு சோதனை தரப்போகிறேன்

www.tamilarangam.net


அதிக நேரம் எடுக்காது
அதற்குப் பதில்களும் வழங்குவேன்
பொறுமையாகக் கேள்
கேள்விகள் பிறந்துகொண்டேயிருந்தது
அவள் சொன்னாள்
சிரித்துக்கொண்டே
யாராவது பைத்தியம் பிடித்து இருக்கும்போது
உண்மை சொல்ல வேண்டும்
நல்ல செய்தியோ
கூடாத செய்தியோ
சந்தேகம்
காத்திருப்பது

எழுந்து நடந்தேன்
தோட்டத்தில் நடுவே
சுத்தமான காற்றினால் சுவாசப்பை நிறைந்திருந்தது
இயற்கையோடு கலந்தபோது
எனக்குள்ளே சந்தோஷம்
சுதந்திரம் போன்ற உணர்வு
அவள் அல்ல
மனமே தீர்ப்புக் கூறவேண்டும்
அவளின் அறிவுரை
சந்தோஷத்தினால் நிறைந்தது
அழகான நாளாக இருந்தது
பிரகாசமாகவும், பரவசமாகவும் இருந்தது
பறவைகள் பாடிக்கொண்டிருந்தன
நீண்டு
வளர்ந்து நின்ற செடிகளினூடாக
நடந்து செல்வதுபோல

அந்தச் சிவப்பு 'அணில்' குஞ்சு
நான் என்றுமே பார்த்ததில்லை
முதல் தடவையாகப் பார்த்தேன்



பற்றைகள், அடர்ந்த குப்பைகளுக்கூடாக
அதனுடைய கண்கள் என்னை உற்றுப்பார்த்தன
இப்போது ஐதாகிவிட்ட குப்பைகள்
என்னிடமே ஓடி வந்தது
எனது கால்கள் தெரிந்திருக்கவேண்டும்...
எவ்வளவு இனிமையானது!
எவ்வளவு பிரியமானது!
என்றுமே இனிமையாக இருந்த என்னில்
பிரியமாகி, ஒன்றாகி - என்னில்
நம்பிக்கையே பிறந்துவிட்டது
என்னுடம்பு ஊடாக ஓடித்திருந்து
எனது தோள்களை பலமாக இழுக்கத்தொடங்கியது
சந்தோஷத்தோடு
என்மீது பாய்ந்து
என்னை மரத்துக்குப்பின்னால்
இழுத்துக்கொண்டு போக முயன்றது
அதனுடைய கண்கள்
எவ்வளவு உண்மையானது
பயங்கரங்கள் எடுபட்டு
கத்துவது கூட இல்லை
எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? மனசுக்கு

இங்கே வா - என்
சின்ன மனுசா
உன்னைப்போலவே
நானும்
சில கவிதைகள்
சேர்த்துக்கொண்டிருக்கிறேன்...

௨004

www.tamilarangam.net


## லாபம்

அவர்கள்
வருவர் அருகில்
திரிவர் தேடி
அதில்
லாபம்
தெரிந்தால்

கருவில் பிணைந்த
நஞ்சுக் கொடி
கால் வழி
கலந்து கலந்து
மாறிப்போன
சொந்தங்கள்
இல்லாத உறவுகள்
பாதங்கள்
சோராமல் வருவர்
அதில்
லாபம்
விரிந்தால்

மறைவு
மகா சோகத்தில்
சித்திரமாய் தெரியும்
அனாதை போல்
அடுக்கி
பிணமாகக் கிடக்கும்
ஆயிரங்கால் மண்டபம்
உலகில்
தியாகம்
செய்பவர்
வருவர்
அதிலும் . . .



செத்துப் போகும்
மனிதனை
நம்பா உலகம்
சிரஞ்சீவி
பணத்தை
நம்புவர் மனிதர்
தெரிவது
லாபம்
பிணமான
மனிதர்
ஆவியாய்
திரிவர் !

2005

www.tamilarangam.net




ஒவ்வொரு சுவாசமும்
ஒவ்வொரு நொடியிலும் தான்
வயது மூப்படைகிறது
காலத்தின் அருமையையும்
நேரத்தின் பெருமையையும்
புரியமால்
மனித சிந்தனைகள்
மிதமான உணர்வுகளில்
மண்ணிற்குள்
தலையைப் புதைக்கின்ற
நெருப்புக் கோழிகள் போல்...

உயிர் கொல்லும்
உன் விழிகளின்
சுற்றி வளைப்பில்
நான் சிக்கவில்லை
கைதியும் ஆகவில்லை
என் கூர்மையான பார்வையால்
உன்னை வேட்டையாடி
உடைந்தவர்களைத் தான்
பார்த்தேன்
கம்பனி இல்லாமல்
தனிமையில் குடித்ததை
பார்த்தேன்
தன்னம்பிக்கை வளர்க்க
தரமற்றுக் குடித்ததைப் பார்த்தேன்
கனவுகள் காணவென்று
கவலையில் குடித்ததைப் பார்த்தேன்
உருப்படியாய் எதுவுமின்றி
கூடிக் குடித்ததைப் பார்த்தேன்
தப்புகள் செய்யவென்றே
தீண்டிக் குடித்ததைப் பார்த்தேன்
உணர்வுகள் பறந்து நின்று



தூக்கம் மறைந்ததைப் பார்த்தேன்
மகிழ்ச்சியும் மறைந்து சென்ற
மருத்துவ மனையும் பார்த்தேன்
நரம்புகள் தளர்ந்து ஆடி
தேடிய வலியையும் பார்த்தேன்

கண்கள் சிவந்து வரண்டு
நெஞ்சம் சுருண்டதைப் பார்த்தேன்
குடித்ததில் இழந்த செல்வம்
தவித்த தாரமும் பார்த்தேன்...

மறுபடியும் மறுபடியும்
தவறுகள் செய்ய வேண்டாம்
மனிதரே அல்லர் என்று
மானிடர் மொழிய வேண்டாம்
அதிர வைக்கும் அவலம்
வேண்டாம்...
உருக்குலைந்து துவழ வேண்டாம்
கூடி நிதம் குடித்து நின்று
குடியைக் கெடுக்க வேண்டாம்
உயர்த்தும் குரல்களையும்
உறைய விட வேண்டாம்
என் மனது கரைகிறது
அங்கே தெரிகிறது
ஓ..! சூரியன் தெரிகிறது!

2005

## தீராத சோகம்

வடக்கிலே யுத்தம்
சிவப்பு ரோஜா
சிந்துமா ரத்தம்?

ஓ! ரோஜா மலரே
நீ முள் குத்திவிடாமல்
எப்படி பத்திரமாக
மலர்ந்து நிற்கின்றாய்?
அதைச் சொல். நானும்
பிரச்சனைகளின்றி
தப்பி வாழ

கடலுப்பு கடல் நீரிலும்
உப்பு நீர் கண்ணீரிலும் . . .
கடலுப்பில் காரியமாகும்
கண்ணீரில் காரியமாகுமா?

ஓ! விண் மீன்களே! - என்
இளமையின் அறியாமையைக்
கண்டா நீங்கள்
கண்ணீர் விட்டீர்கள்

மான் மீது பாதைக்கு
கோபமில்லை
மண் மீது மரத்திற்கு
கோபமில்லை
விண்மீது மின்மினிகளுக்கு
கோபமில்லை
பழம்மீது இனிப்பிற்கு
கோபமில்லை
இயற்கைமீது பசுமைக்கு
கோபமில்லை
மனிதர்களுக்குத்தான்
வாழ்க்கையில் என்றும்
தீராத சோகம்

(௨௦௦௨)





www.tamilarangam.net




வெள்ளைக்கார வீதிகளில்
வெறுமையின் பார்வையில் . . .

எங்கள் மண்ணின் இனிமையை
சுவைத்தது ஒரு காலம் . . .

என்னைப் பற்றியுள்ள சங்கிலியின்
ஒவ்வோர் இணைப்பிலும்
தீப் பொறிகளை
வைத்திருக்கின்றேன்

அடிக்கடி முணு முணுக்கின்ற
உணர்ச்சிப் பொறிகளை
எலும்புக் குருத்துக்குள்
புரட்டிப் புரள்கின்றேன்...

யுத்தத்தின் வெறித்தனத்தால்
இரக்கமின்றி சாகடித்த
கோரச் செயல்களெல்லாம்
நெஞ்சில் தீமூட்டி
நெருப்பாய் எரிகின்றது

அயல் வீட்டு அம்மாவின்
அழகான கோபுரம்
பிணங்களுக்கிடையில்
எரிந்து புகைந்தது
சோகத்தில் நின்று
பிளந்த நெஞ்சு
பொறியாய் விழுந்து
பொசுங்கி மடிந்தது

பட்ட காயங்கள்
எழுப்பும் ஓசைகள்



தொண்டைக்குள் வந்து
செத்துக் கிடக்குது
இதயத்தின் கிறு கிறுப்பில்
குத்திடும் இரத்தமோ
கொதிப்பில் கொந்தளித்து
உடம்பை உலுக்குது
அமுக்கப்பட்ட
உணர்வுகளோ...
தீயிலும் அழியாத
தீப்பொறிகள் அவை...

௨00௨

www.tamilarangam.net


## குட்டை நாய்

மின்னொளி ஆக்கிய நிழலில்
சிந்தனையில் மூழ்கிய
அந்தக் கலைஞனின்
லயத்தோடு அசைந்துகொண்டிருந்த
துவிச்சக்கர வண்டி...

கேவி அழும் குழந்தைபோல்
பிஞ்சுக் குரலில் ஊளையொலி...
அவர்
சிந்தையைக் குழப்பியது...

குழந்தைக் குட்டியை
உற்றுப் பார்த்தார்
குட்டை பிடித்த
பெட்டை நாய்க்குட்டி

திரும்பி நடந்து
உருட்டி நடந்தார்...

தாயின் மீதளைந்து
பிஞ்சு வாயினுள்
பாலுறுஞ்சும்
சுகமிழந்த குழந்தை

மீண்டும் குழந்தையின்
குறாவும் குரலொலி...

நடையை நிறுத்தி
பார்த்தவர் மனது
உள்ளொடுங்கி
உருகியது ...

மிருக இனத்திலும்...
பெண்கள் அனாதை ...



சத்திர வாழ்க்கையின் ...
சலித்த வார்த்தைகள்...
அவரின் அந்தராத்மா
வெகுவாய் வெட்கிற்று...

தனித்துப்போன
குழந்தை நாய்க்குட்டி...
தாயை இழந்து தவித்தது கண்டு
வாரி எடுத்து
மார்போடணைத்தார்...

மூடிக் கிடந்த
முன் கதவை...
மெதுவாய்த் திறந்து
மௌனம் காத்தார்...

கொதித் தெழுந்த...
மனையாள்
பெட்டை...
குட்டை...
குறும்பாய் பேசினாள்
கெம்பிய
கோலப் புலம்பலில்...
கலந்தும்...
கானமிழுத்தும்
கவிதையுள் களித்தார்...

உப்பு நீரில்
உரசி எடுத்து
இயல்பாக கைகள்
இதமாக வருடி
இரவும் பகலும்
இயன்றது செய்தார்...

www.tamilarangam.net


உடையிழந்தும் . . .
உயிரிழந்தும். . .
உறவிழந்தும் . . .
மனையிழந்தும். . .
முனை மழுங்கும் மனிதரே. . .
நன்றியுள்ள
மிருகத்தை இழப்பதா. . .?

சூறாவழி வந்து. . .
சுழன்றடித்த நிமிடத்தில் . . .
குருதி படிந்த உடைகளுக்கிடையில். . .
சரிந்து கிடந்த பிணங்களுக்கிடையில். . .
புதிய புதிய முகங்களுக்கிடையில். . .
இரவுகள் நீண்டு திக்குத் திசை மாறி
நிறுத்திக்கொண்டார். . .
நாதியற்று

இரத்த உறவுகள். . .
இது யார் என்றனர் . . . ?
இரையாகிப் போன வீடு. . .
இலட்சிய வேட்கையில் . . .
இரவல் கைகொடுத்தது . . .
தோற்றுப் போகிறது
வாழ்க்கை. . .

நீண்டு போகின்ற பொழுதுகள். . .
நம்பிக்கைகளிலே . . .
பொறி பறிந்த
மூச்சுக்கள். . .
தொடர்கின்றன. . .

எரிந்து
தீய்ந்து இதயம். . .



கூனிக் குறுகி. . .
கூசிக் கூசி. . .
பதுங்கிப் பதுங்கி. . .
நடுங்கி நடுங்கி . . .
உடைந்த மனத்தோடு
தன்னை உருக்கலுற்றாய். . .
திரும்பினார். . .
'அன்னை இல்லம்'. . .

பனை மட்டை வேலியோ. . .
பாடாய்க் கிடந்தது. . .
பரிதவித்துப் பார்த்து. . .
பசுக்கன்று தவிப்பதுபோல். . .
மனம்
கலங்கிப் புலம்புகையில் . . .
காந்த அசைவுகளில்
பாய்ந்து வந்த
பறட்டைப் பெட்டைநாய். . .
நன்றி பெருக்கி
நக்கி நனைத்தது. . .
ஊளை ஒலியோ
உடலைச் சிலிர்த்தது. . .

2004

www.tamilarangam.net


ஓர ஞாயிறு...

அன்று ஞாயிறு
காற்றலையில் செய்திகள்
கரைந்து
காதைப் பிளந்து
கவலையில் ஆழ்த்தின
கடல் காவிச் சென்ற கதை
கனவாகி நின்று
கனத்து நின்றன...

அதிர்ச்சி அலைகள்
ஆசிய நாடுகளில்
அனத்தம்... அனத்தம்
இந்து சமுத்திரத்தில்
இயற்கையின் சீற்றம்
இலங்கை இருப்பிடத்தில்
இப்படியோர் நில நடுக்கம்
இதயங்கள் படபடக்க
உலகெல்லாம் ஒளி பரப்ப
வடக்குக் கிழக்கெல்லாம்
உயிரற்ற உடல் விறைக்க - எம்
உடம்பெல்லாம் நடுநடுங்கும்
துயரத்தின் பரபரப்பு
துடி துடித்த கூக்குரல்கள்
உலகத்தைக் கிழித்து நின்று
கரைக்கிறது கண்களையே!

ஏனம்மா
கடல் தாயே! - எம்
மக்களைக் குமுற வைத்தாய்!
கோரக் கொடுமைகளால்
கோபித்தக் கொந்தளித்தாய்!
பேரலையாய் பிரண்டு வந்து - அப்
பாவிகளைப் புரட்டிவிட்டாய்



பேயாய் உருவெடுத்து
பெண்களையும் விழுங்கிவிட்டாய்!
பால் உறுஞ்சும்
குஞ்சுகளை
பாதகியே
உறுஞ்சிவிட்டாய்...!

போர் வந்து போன - எம்
வேதனையோ தீரவில்லை
வறண்ட வயிறுகளும்
வாடிய நரம்புகளும்
வெறுமையில் இருக்கையில்
வேடிக்கை பார்க்கவா

எம்மீது சீற்றம் கொண்டாய்?
இயமன்போல் வந்து - எங்கள்
இதயத்தைப் பிளந்தாயே!
கடல்தாயே!
இப்படி ஏன் உருக்கொண்டு
ஊர்களையே அழித்தொழித்தாய்?
திரண்ட உன் கோலத்தில்
மாண்டதே என் தேசம்!

மீண்டும் மீண்டும்
மீள முடியாத சோகம்
இனியாவது எம்முள்
வேற்றுமைகள் வேண்டாம்
இனங்களோ வேண்டாம்
மதங்களோ வேண்டாம்
மொழிகளும் வேண்டாம்
இயற்கையால் வந்த
சோதனைகள் போதும்
ஐயகோ! நாம் இனிமேல்
ஒற்றுமையாய் வாழ்வோம்!

www.tamilarangam.net




உயர்ந்த மலைகளுக்கிடையில்
தென்னை மரங்கள்... அந்த
தென்றலின் தாலாட்டில்
சஞ்சரிக்கும் எனது
அன்றைய சூரியன்...

என் உடம்பிலிருந்து
புத்தி மட்டும்
எங்கோ சுழன்றபடி

என் தேசத்துப் பெருமைகள்
பச்சையாய் விரியும்போது என்
ஆதார கோளத்துள்
அயல் கிராமத்தில்
அத்துமீறி
குடியேறிய குடிசைகளின்
குரல்கள்...

ஊனம் வடிகின்ற
வேர் அறுந்த இதயங்கள்
வெறிச்சோடிய கரும்பலகைகள்
சிவப்பாகி மாணவர்கள்
குழைந்து அழும் குழந்தைகள்
செருப்புகள் ஒற்றையாகி
பேச்சின்றி பெண்கள்
என்ன கொடுமை!
விளை நிலத்தில்
உருக்கு விதைகள்
இடித்து முழங்கி சீறுது...
எட்டி நிற்க சக்தி அற்று நாங்கள்...

மனித உருவழிகையில்
மாற்றம் வேண்டி
மனித வேட்கையின் புரட்சி.



மனிதன்
இனவெறி பிடித்து
தடங்களை அழித்தபடி
ஏக்கக் குமுறல்கள்...
சிந்தனைகள் மூடுண்டு
உணர்வுகள் வரண்டு
உலர்ந்த பின்னும்
குருதியில் பரவும்
தாய்நாட்டு தாகம்
தசை பற்றி எரிகிறது

ஊனமாய்ப் போன
உணர்வுகள் அத்தனைக்கும்...
அகாராதியில் அசைந்தாடுது
'அகதி' என்னும் ராகம்

உயிர்ப்பை மட்டும்
உடம்பில் காப்பாற்றி
கெட்ட உலகத்தில்
பட்டம் சூட்டிய பிரக்ஞை
உலக மொழிகள் ஊடுருவித் தழுவும்
புதர் மறைந்த புலம் பெயர் நாடுகள்
தொலை உணர்வு
சுமந்து வரும் சோகம்
சிந்தனைகள் சுழன்று
குறுக்கே
கண்டங்களும் கடல்களும்
தொலைபேசிக் கம்பிகளில்
அரசியல் சதிகள்... எந்த நேரமும்
நெஞ்சு அஞ்சியபடி

இப்போ கொஞ்சம்
நிசப்தம்தான் பூமி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

சுழலும் எனது ரசக் கோளம்
கானல் நீராகிக் கவிகிறது.

இப்படித்தான் இரவுகளில்
இமைகள் இணையாமல்
இடையில் முறிகையில் என்
கோளத்தில் நினைவுகள்
மூச்சுக்களில் திணறும்...

2005



www.tamilarangam.net 



வலியும் அலறுமாக
விழிக்கின்ற
மனிதப்பிறப்பு
என் வலி
எதையும் வார்த்தைகளாக்கி
உன் வலி
ஆக்கியபோது ... கவி புனைந்தேன்

மனதின் தாபங்கள்
எண்ணங்கள் போட்டு
மலர்களின் நடுவே
மேடைகள் போட்டு
மனித நேயங்கள்
தெட்டத் தெளிவாகி
தட்டி எழுப்பி
தீர்மானம்
உணர்ச்சிகள் எழுந்து
தென்றலாய் வீசும்போதெல்லாம்... கவி புனைந்தேன்

கல்லறைக்குத்தான்
நிரந்தர மௌனம்
என்றிருந்தேன்
ஆனால் ...
பேசிப் பேசியே
பிழைகளாகிவிட
நாக்கைச் சுருட்டி வைத்து
வாக்கை
காப்பாற்றும் போதெல்லாம் ... கவி புனைந்தேன்

மனதின் யூகம்
மலையாகி
விழிகளில் எரிந்து
சொப்பனங்கள்



நெருப்பாகி
நெஞ்சைச்சுட்டு
கண்களில் - பாஷைகள்
அழகு காட்டி
இதயத்தில் மழை தூவும்போது... கவி புனைந்தேன்

அனல் பொறுக்கமுடியாத
பகல் நேரங்கள்
மேகங்களை ஓட்டும் காற்றும்
காற்றைப் பரப்பும் கடலும்
பள்ளங்களில் சுழன்று
காற்றும் நீரும்
சிதறிப்போகும்

அந்தரத்தில்
பறக்கும்
தேடும் நிழலில்
திரையின் அழகுகூடி ... கவி புனைந்தேன்

கற்பூரம் போன்ற
பனிமலைகள்
கவ்விடும் பூமி
சிரித்திடும் இரவு
புன்னகையில் ஒளி
பூரித்துத் திரண்டு
உருண்ட
உன்னுருவில்... கவி புனைங்தேன்

சரித்திரங்கள்
சருகுகளாகி
சமநீதி
சமுதாயம்
சங்கடம்

www.tamilarangam.net


சபிக்கப்பட்ட பூவாகி
கசங்கி - கண்ணீராகி
மனசுள் மறுகும்போது... கவி புனைந்தேன்

இதயச் சுவர்களெல்லாம்
இரத்தக் கறைகள்
பனிபோல்
உறைந்த உணர்வுகள்
ஊனமற்ற
பயமற்ற
புதிய நாடு
புதிய உதயம்
மனதில் மலரும்போது ... கவி புனைந்தேன்

௨00௪



## காற்றுப் பிரிந்த போது...

அவள்
மனதால் அழகானவள்
மென்மையின் வதனத்தை அணைக்கின்றாள்
வாழ்வின் தோழி
என்பதால்
வன்மையின் வேதனையை வெறுக்கிறாள்
சாவின் சாவி என்பதால்
அவளுள் மென்மை
வன்மையை வெல்கிறது
அவளுள் மணம் பரப்பும்
மென்மையான மலர்கள்...
உயிர் பெறுகின்றது
வன்மை வலிக்கின்றது...

இயல்பான எளிமையை
இறுக்குகின்ற அணைப்பு
எளிமை
அழகானது
ஆனந்தம் தருவது...

அவளுக்குப் பிடித்தமான
நாமத்தை
நாளுக்கு நாள்
இதயத்தில்
செதுக்க செதுக்க
இனிமை கசிகிறது...
மகிழ்ச்சி தெரிகிறது
மனசு வலிக்க வலிக்க
பரந்து கவிந்த
பயங்களோடு
ரம்மியமான மாலைப்பொழுதில்
இயற்றியதோர் பாடல்
முறியடித்து முத்தி செய்கிறது

www.tamilarangam.net


பிரமிப்பின் பார்வையில்
பிரபஞ்சம்
வெறுமை...
ஒவ்வோர் அசைவுகளிலும்
கண்ணீர் மச்சங்கள்
வெற்றிகள்...?
காற்றத் துருத்தி
காலியாக இருக்கின்றது...
வெறுமை எளிமையாக இருக்கிறது...
வற்றாமல் வாரி வழங்குகிறது
காற்றை...
அவள் சுவாசிக்கின்றாள்
தென்றல் இல்லாமல்...
சுவாசத்தில்
சுகந்தம் சுகம் தருகிறதா?
சுகமும் சோகமும்
சுகம் கிடைக்கின்றது ஆனால் அவள்...
அந்தக் காற்று
அவளை விட்டும்
அவனை விட்டும்
எழுந்து போகும் போது
எல்லாமே
முடிந்துதான் போகும்...

2005



## காதல் கமழும் கவிதைக்கு

என் நெஞ்சத்துள் பெருக்கெடுக்கும்
நேசமுள்ள கவிக்குயிலே...
எப்படி இருக்கின்றாய்?

ஓ.! நீ ஆற்றில் நிரம்பிய அழகி
எனது ஆற்றலை நீதான் ஆமோதித்தாய்
எனக்காக விழித்து மலர்கின்றாயே!
உன் வாசத்தோடு ராகம் பாடுவது தப்பா..?
என் உயிரின் விலாசம் உனக்கு கிடைக்கும்
என்னை அப்போதாவது இனம் கண்டுவிடு..

இலக்கண வரம்புகளுக்குள் கட்டுப்படாத உன்
இனிய இலக்கியமே என் காதல்
ஆதவனின் கதிரொளிக்கு நிகரானது உன் காதல்
கற்பனையில் கனியும் உன்
தீபத்தின் எண்ணங்களும் வண்ணங்களும்
வர்ணிக்க முடியாதன..

என்னுள் உருவாகும் காதல் கவிதைகளை
கவனித்துக் கேள் கொஞ்சம்
உன்னுள் உருவெடுக்கும் காதலின்
அர்த்தமும் அதுதானா?

உலகத்தை இயக்கவைக்கிறது காதல்
உலகின் தித்திப்பான வார்த்தையோ காதல்
ஆத்மாக்களின் தாளம்தான் காதல்
ஆய்வில் முதலிடும் வார்த்தையும் காதல்
ஆரோக்கியத்தின் இயல்பு இந்தக் காதல்

பலவீனர்களை பலவான்களாக்குவதும் காதல்
பித்தர்களை ஞானிகளாக்குகிறதே காதல்
மனிதனை மனிதனாக்கும் உணர்வே காதல்
இதயங்களின் சங்கமிப்பே காதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உளம் பகிர்வு உடையதே காதல்
சுருதி பேதம் காணும் இருண்ட காதல்
போலி என்பார் தோல்வி கண்ட காதல்
சோலி என்பார் கேலி செய்யும் காதல்

சமாதான காதலைவிட
சமாதி கட்டிவிட்ட காதல்தான் அதிகம்
ஆனால்...
நான் வடித்தெடுக்கும் கவிக்குயிலே உன்
காதலின் பரிமாணங்களும் வீச்சுக்களும்
என்றும் அலுக்காதவை...
எந்த வயதிலும் சலிப்புத் தராதவை... நீ
காதலாகப் பாடிய பாமர எழுத்துக்களே
பாராட்டப்பட்ட இலக்கியங்களை
பரிணமித்தன.. உன்
இலக்கியக் காதலாயினும் சரி.. உன்
எமக்குள் தூது தேவைப்படுகின்றது அல்லவா..?
எழுதப்பட்ட காதல் கவிதைகளை விட
எழுதப்படாத உன் காதல் இலக்கியமே
உயர்ந்த இலக்கியம்...
காதலுக்கு உன் கவிதை தரும் அர்த்தம் என்ன...?
காத்திருக்கின்றேன்...
உன் பதிலுக்காய்
நேசத்தோடு
உன் ஜோதி

2003



## தோழிக்கு ஒரு செய்தி

விந்தையான உலகமிது தோழி - பல
வேதனைகள் நிறைந்தபடி தோழி
நாடு விட்டு வந்தோமடி தோழி
படும் வேதனையோ நானறிவேன் தோழி

பெண் அடிமை சமத்துவம் என்றும் சம தர்மம்
பேண வேண்டும் என்றும்
போராட்டம் செய்தார்கள் தோழி
பெண்கள் அடிமைகள் தான் தோழி

கணவனை நம்பி வந்தாள் தோழி - அவன்
வேறொருத்தி வலையினிலே தோழி
ஆச்சரியமில்லையடி தோழி
வெளிநாடுகளில் நடக்குதடி தோழி

கற்பனையில் வந்தவள்தான் தோழி -கடும்
சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள் தோழி
உலகத்தைப் பார்க்கின்றாள் தோழி - வெறும்
போலியென்று உணர்கின்றாள் தோழி

காசு பணம்தான் உறவு இன்று தோழி
பாசம் விலை பேசுதடி தோழி
நேசம் இங்கு ஏங்குதடி தோழி
நேசிக்க ஆள் இல்லையடி தோழி

200

'சுனாமி'
சொல்கிறாள்
சுமாத்திராவில் - தான்
அமைதியான வாழ்க்கை
நடத்தியவளாம்
எங்கள்
பூமிதான்
நடுங்கிப் பிளந்து
வெப்பக் காற்றை
கக்கியதாம்
அதனால்த்தான்
கோபம் கொண்டு
கொந்தளித்து
கொதித்தெழுந்தாளாம்.
சீற்றங்கொண்டாளாம் . . .!

தப்பிக்க முயல்கிறாள்
'சுனாமி'
சூட்சிக்காறி

சுரண்டல் வர்க்கத்தின்
சூட்சியால் வந்தவள்போல்
கடல்
தொழிலாளர் வர்க்கத்தையா?
தெரிந்தெடுத்து
தொலைத்தெறிந்தாய்!
எங்கள்
ஆசிய நாடுகளில்
மணற்குவியல்களாக
மனித மரணங்கள்
கூக்குரல்கள்... தவிப்புக்கள்...

தாங்கமுடியவில்லை
இந்தோனேசியா..



இறந்து கிடக்கிறது...
இதயம் வெடிக்கிறதே!
இலங்கைக்கு
இப்படி ஒரு விதியா?
இது கொடுமை அம்மா!.

'சுனாமி'
ஜப்பானில் பிறந்தவளாம்
ஜெகத்தையே உலுப்பி
எங்கள்
ஜனத்தையே
அழித்துவிட்டாயா?

முடியாது உன்னை
மன்னிக்கவே முடியாது.

போடி
மந்திரவித்தைக்காரி

நம்பிக்கையை வளர்ப்போம்
வீறு கொண்டு - நாமும்
மீளவும்
எழுந்து வாழ்வோம்!
மனிதநேயம் கொண்ட
புதுயுகம்
கண்டு வாழ்வோம்!.

2005

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



இந்தியப் பெண்மணி
இதயத்தின் கண்மணி
கண்ணுறங்கா...
கல்வி...
விண் வெளி ஓடத்தில்
விண் மீனை அளக்க
வீரப் பயணம் செய்த
வீரக் கன்னி...

கல்பனா
கர்நால் பெற்றெடுத்த
கற்பக நிலவொளியே!
புருவங்கள் புடைத்து
விழிக்கிறது உலகம் - உன்
விதைப்பு வித்தையில்

நாசா
மேகக் கூட்டத்தில்
நிலாத்தரையை அளக்க
நித்தினம் நித்தினம்
அயராத தேடல்
விண்ணை வரைந்தளக்க
விரைந்து ஓடினாயே...!
பிற ஆண்களுடன்
சரி சமமாகிவிட்டால்
பெண் இதயங்களை
கசக்கிடும்
நமது பூமி - இந்த
வரட்டு வேதாந்தங்களை
விரட்டி பொசுக்கிவிட்டு
விண் வெளியை வரைந்த
வீரச் செல்வமடி...

விண்ணில்
வீசிப்பறந்துலாவி



காற்றினில் மிதந்ததை
வியந்திருக்கையில்
கென்னடித் தளத்தில் - அந்த
மேகக் கூட்டங்கள்
கவிந்து
பட்டு நாடாவைப் போல்
நெளிந்து சுருண்டு
கோலம் போட்டதே!

கொலம்பியா...
பதினாறு நாட்கள்
பக்குவமாய் பறந்துவிட்டு
பதினாறு நிமிடம்தானே...
சிதறிச் சொரிந்தபோது
உயிரற்ற புன்னகையில்
குரல்கள் கரகரத்து
குலுங்கித் துடித்தோமடி!

உலகில் பிறந்தவர்க்கு
உயிர்கள் நிச்சயமா...?
உலக இதயங்களை
உலுக்கிவிட்ட கல்பனா...
உன் துணிவை எண்ணி
உலகம்
கை கட்டி வியக்குதடி!
நீ மரணத்தை வென்றவள்
உன் வெற்றி
பெண் உறவுக்கு
பெருமை தரும்
வெற்றியின் விழுமியப் பொறி!
சிதறிய உன் பொறி
உலக சரித்திரத்தின் வீரப்பொறி!

2003

www.tamilarangam.net




என்னருமைக் கமலாவே
எப்படி நீ நலந்தானா?
உன்னருமைத் தோழியிவள்
சுகமாகத்தான் இருக்கிறாள்!

வாத்தியாரு நீ இப்போ
வசதியாகத் தான் இருப்பாய்
வெளிநாடு வந்து நானும்
வேதனை தான் மிச்சமடி
பாத்தியாடி தலையெழுத்த
நான் படிச்ச லாபமென்ன
என் வீட்டுக் குசினியினுள்
நிண்டு தினம் வேகுறேன்டி
ஆனால் இங்கு வேலையெல்லாம்
கறண்டுலதான் செய்கிறேன்டி
ஆறு மணிக்கு நானெழும்பி
அன்றிவு படுக்கும்வரை
நடந்து பறந்து வேலைதாண்டி
என் காலெல்லாம் வலிக்குதடி
கையெல்லாம் நோகுதடி!

ஆசிரிய கலாசாலையிலே
ஆடிப் பாடித் திரிந்தோமடி
போட்டிகள் நடந்த போது
வெற்றி நடை போட்டோமடி
இளவரசியாய் நான் நடித்தபோது - நீ
அதிர்ந்து போய் அழுதாயடி
நாட்டிய நாடகத்தில் - நாம்
நர்த்தகிகள் ஆனோமடி
ஓட்டப்போட்டியிலும் நாம்
விட்டோமாடி... முதலிடம்தான்!

கொண்டல்கடலை திண்ட நாளை
கொஞ்சம்கூட மறக்கவில்லையடி



சேர்த்து வைத்த காசுக்கெல்லாம்
தேடி தேடிச் சீலை வாங்க
தெருத் தெருவா போய் வருவோம்
சினிமாக்கள் நடக்கையிலே
கைகளையும் கோர்த்துக்கொண்டு
நாள் முழுக்க பார்த்திருப்போம்
எல்லாமே தொலைஞ்சு போச்சு
எத்தனையோ காலமாச்சு
சொல்லாமல் நாளும் போச்சு - என்
சொர்க்கமும் மறைஞ்சு போச்சு!

கமலா டீச்சர் நீங்கள் இப்போ
நல்ல வேலை செய்ய வேணும்
பயணம் வைத்து கிராமங்களுக்கு
பல ஆறுதல்கள் சொல்ல வேணும்

பரிதவிக்கும் பிள்ளைகளை
பக்குவமாய் காக்க வேணும்
படிப்பு பெரும் சக்தியென்று
பாட்டாளிகளுக்கு கூற வேணும்
பெண் கல்வி தேவையென்றும்
பெரு விளக்கம் சொல்ல வேணும்
மனித நேயம் மிக்க பெரும்
சமுதாயம் தோன்ற வேணும்
மனத் தெளிவு பெற்று நீயும்
மானிடத்தை மாற்ற வேணும்!

என்னருமைக் கமலாவே
உன் பதில் கண்டு நானும்
மீண்டும் தொடர்வேனடி
மிகுந்த பாசத்தோடுன் - ஜோதி!

2002

www.tamilarangam.net


## பாதச் சலங்கைகள்

ஆனந்த நடனம் ஆடினாள் அவள்
அழகிய விழிகளால் கதை பேசினாள்...
அபி நயங்களால் வியந்து தோன்றினாள்
அடிப் பாதங்களால் தாளம் கூறினாள்

கொஞ்சம் மொழி கலந்த இள மங்கை
கோடி இன்பங்களை அள்ளித் தந்தாள்
சின்னஞ் சிறு கிளியே என்று
ஜாலங்கள் காட்டி நின்றாள்
த கி ட த திங்கின தொம் என்று
தாயையும் மிஞ்சி நின்றாள்

ஆடும் மயிலில் வருவான் அழகன்
ஆற்புதம் அரங்கில் ஆடிய வர்ணம்
மாறிடும் ஜதிகளும் மிருதங்க ஒலியோடு
பின்னிப் பிணைந்ததே பாதச் சலங்கைகள்.

அபி நயத்தோடு பாவமும் நடிப்பும்
அனுபவமிக்க நர்த்தகி உணர்வில்
மருண்ட விழிகளின் லாவண்யத்தில்
லயித்திட்ட மனங்களோ சொல்லியும் அடங்கா

அதிகாலை
எனதூரில் விழித்தாக வேண்டும்!
புகழ் பெற்ற நல்லூரை நான் காண வேண்டும்!
விழிகளின் அசைவில் வேதனையே உணர்த்தி
வீறு கொண்டு தமிழ் தாகமே பெருக்கி
தாயகம் கனவினில்
தாண்டவம் ஆடி நின்றாள்...

2002





www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்...?
சமத்துவம் பேசும் ஆண்கள் - அதில்
தமக்கென வரும்போது தனை மறந்து உனை
அடக்குவதை எண்ணியா?...
உன்னை நான் புரிவேன் ...ஏன்?
நானும் ஒரு பெண்!

பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்...?
சிந்தையில் வேறொருத்தி சிறிய இன்பத்தில்
விந்தையுள் போற்றிடும் வேளையில் - உனை
சிந்தையுள் ஆழ்த்தி பெண் என்று விம்மும்
உன்னை நான் புரிவேன்... ஏன்?
நானும் ஒரு பெண்!

பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்...?
தாயை இழந்த உன் இளமைப் பருவமதை
இனிய வார்த்தைகளால் இனிதாகச் சுவைத்துவிட்டு
காலம் கனி சுரந்து கல்யாண மெனும்போது
காரணம் காட்டி சீதனம் கேட்கும் - அந்த
ஆண்மையற்ற உன் காதலனை எண்ணும்
உன்னை நான் புரிவேன்... ஏன்?
நானும் ஒரு பெண்!

பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்...?
மழலைச் செல்வங்களை மனதார ரசிக்குமுன்
மனதை முறித்துத் தன் குடும்ப துதிகளைத்
துணையிழக்க - நீ
மௌனமாகி உன்னையே நீ அழிக்கும்...
நானும் ஒரு பெண்!

பெண்ணே! மௌத்தில் ஏன் அழுகிறாய்...?
ஈன்றெடுத்த மழலைகள் விழி பெயர்ந்து நிற்க
ஈவிரக்கமின்றி மறுக்கள் உன்னுடலை வரைய



வாய்ச் சொல்லில் வீரரான இந்த ஆண்கள்
வாழ்க்கையில் வெறும் கோழையென எண்ணும்
உன்னை நான் புரிவேன்... ஏன்?
நானும் ஒரு பெண்!

பெண்ணே! மௌனத்தில் ஏன் அழுகிறாய்...?
அழுவதை நிறுத்து
பாரதி பெற்றெடுத்த புரட்சிப் பெண்ணே!
அடுப்பங்கரை முதல் அரசியல் வரை
பெண்கள் வலம் வரும்போது
கணனி உலகில் நாம் உறவாடும்போது - நீ
மௌனத்தில் அழுவதை வெறுக்கிறேன்
புலத்தில் உன் புலம்பல் போதும்
கண்ணீரைச் சிந்தி உன் கன்னத்தை
அசுத்தப்படுத்தாதே!
நாமெல்லாம் ஒன்றுபட்டால்
சக்தியமாய்த் துணிந்து விட்டால்
வென்றிடலாம் ஆண்களை
அழுவதை நிறுத்து! பெண்ணே! அழுவதை நிறுத்து!

2002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பிரசவம்

அவள்
அந்தத் தை மாதக் காலை
குளிர் காற்றில்
சிதைந்த முகில் கூட்டங்கள் போல
சீர் குலைந்து சிந்திக்கொண்டிருந்தாள்...

அழகியல் படிமங்களோடு
அவளில் அவதரிக்கும்
கவிதையின் கருக்கட்டல்
அனுபவச் செறிவுகளோடு
உணர்வுகளில் ததும்பல்களில்
அர்த்தமுள்ள வடிவங்களாகி
மொழியோடு லாவகம் கைகூடி...
அவளின்
அங்கீகரித்து ஆனந்தமாகிறது...
கற்களைச் செதுக்க செதுக்க
மறைந்திருந்த மகுடி காட்டும்
அழகிய சிற்பம் போல...
அவளுள் உருவெடுக்கிறது...
மொழி மயங்கி...
உணர்வுகள் அர்த்தமாகின்றன...
பச்சிளங்குழந்தை தவறிவிழ
பதறி எடுக்கும் தாயைப்போல
பாசத்தின் பரவசத்தில்
அவள் பிரசவித்த குழந்தையை
பரித்து முத்தமிட்டாள்...

எத்தனையோ கொலைகள்
ஏராளமான உயிர்ப்பலிகள்
எதுவும் சித்திரவதை
அறுவைச் சிகிச்சைதான்
சுகப்பிரவசமல்ல
பரந்த தேடல்கள்...
நம்பிக்கை...



என் தேசத்தின் அந்த அரசியலும்
ஒரு பிரசவம்தான்...

அடிக்கடி எழும்
முனகலையும்...
முக்கலையும் தவிர
நிஷப்தமாயிருந்தது அறை
இறப்பின் எல்லைவரை
போய் வரும் வேதனைகள்...
வேதனையால்...
கோணிப்போன முகம்
அங்கலாய்த்த அலறல்கள்...
ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் வரும்...
அடிக்கடி வீரிட்ட அழுகை
அயர்ச்சியுடன்...

சுற்றிலும் சாதனங்கள்...
இயந்திரக் கருவிகள்...
சுவர் மணிக்கூடு...
கத்திகள்... கத்தரிக்கோல்
கதிர்களாக மிளிர்ந்தன...
அழுகை அடங்கியது
அலறலுடன்
அந்தப் பிரசவம்
புதிய ஜீவன்...
கண்ணீர் நிறைந்த கண்களுடன்
அவள் சிரித்தாள்...
தாய்மை..
எவ்வளவு உன்னதமானது...!
தாண்டவம் ஆடியது
அவள் உள்ளம்...
ஒரு ஆணால்
முடியாத காரியம்...!?

2003

www.tamilarangam.net




கிட்டத்தட்ட
எங்கள் வகுப்பில்
நாற்பது பேரிருக்கும்
எல்லோரும் நாங்கள்
பெண் பிள்ளைகள் தான்
கடுமையானவர்கள்
மின்சார இயக்கத்தில்
கத்துகின்ற
விளையாட்டு
கோழிக்குஞ்சுகள் நாங்கள்
எந்த நேரமும்
எங்கட நெஞ்சுகள்
பட படக்கும்
வெள்ளித் தகட்டு
நிப்புப் பேனாக்களின்
கிறுக்கல்கள் கிறு கிறுக்கும

ஒவ்வொரு காலையிலும்
பள்ளிக்கூட
கேற்றுக்கு வெளியே
கூடி நின்று கத்துறதும்
பாடசாலைக் கீதத்தை
பண்ணிழுத்துப் பாடுறதும்
எங்கட அத்தனை பேரினதும்
கோழிக் கொக்கரிப்பும்
ஆர் நான்கு
இருபத்தி நான்கு
அந்தச் சத்தமும்
நளவெண்பாவும்
நைற்றிங்கேலும்
ஒவ்வொரு வசனமும்
இன்னும்தான் ஞாபகம்

சிவப்புச் சாறியோட
ராசம்மா ரீச்சர்
அச்சா
இண்டைக்கு
செப்பமாக அடிப்பா
இப்படித்தான் நினைப்போம்
பிரம்பு அடியில்
பிஞ்சுக் கைகள்
சிவந்து போகும்
நாம்
மோதி உடைவதால்
மிதமான தண்டனைகள்
அந்த நாட்களில்
அப்பிடித்தான் அடிப்பினம்
இப்போ
இந்த உலகத்தில்
பிள்ளைகளின் உரிமைகள்
அவர்கள் தான்
நிபுணர்கள்
முதன்மையும்
அவர்கள்தான்
எங்கட
பழைய ரீச்சர்
பாவம் அவ
உண்மையாக நம்பினா
கற்பித்தல் முறை
அதுதான்
சிறந்ததென்று

2005

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



விண்ணிடைத் தீபம் போல
விழித்திடும் புத்தாண்டே உன்
ஒளி கொண்ட வரவு கண்டு
உவகையில் மிதக்கிறேன்
மனம் என்னும் பூங்காவில்
பாசத்துடன் வரவேற்று
பரவசத்தால் இதழ் விரிக்கிறேன்...

அன்பும் அடக்கம் எளிமை
பண்புடன் பணிவும் பாசமும்...
பொல்லாதார் தன்மையில்
பொறுக்கும் கனிவும் பெற்று
பக்குவ நிலையும் பொழிந்து
செழிப்புறும் வாழ்வு காண...
விழி மொழிகளில் மலர் தொடுத்து
உதடுகளில் தேன் தடவி - உன்னை
வரவேற்றுக் காத்திருக்கிறேன்...

உருகியுடைந்த பனியாய்
இதயத்துள் படிந்துபோன
பனிக்கட்டிகள்...
விழிகள் வழிந்து உருகிய
பொழுதுகள் புவி மீதில் மறைந்து
பாவி வேஷம் கலைந்து
பண்பு நிறை மனிதர்களாக
புவி மீதில் நீ புறப்பட்டு
புத்தாண்டே புலர்ந்திடுவாய்...

மனங்கொள்ளும் புத்தாண்டே!
மாசென நஞ்சை நெஞ்சில் வைக்கும்
மனிதர்கள் மறைய வேண்டும்!
நேசமும் பரிவும் நிறைந்து
நெஞ்சினில் கொள்ளவேண்டும்!



நாவிடை வார்த்தைகள் எல்லாம்
நலம் பெற நடக்க வேண்டும்!
உள்ளத்தில் உண்மை நேர்மை
உயர் குணம் ஓங்க வேண்டும்!
வெள்ளத்தில் மூழ்கி நின்று
வேதனை சுமந்த மக்கள்...
வள்ளத்தை அறிந்து நல்ல
வாழ்வுகள் பெற வேண்டும்!

புலர்கின்ற புத்தாண்டே
புத்துணர்வை பூஜித்திடுவாயா...?
போதும்
இனியும் விழிகளில்
அழுகைகள் வேண்டாம்
என் தாயகத்தில்
ஓசைகள் வேண்டாம்...
புதிய மண்
வாசனை பூத்திட
புத்தாண்டே நீ பூக்களைத் தூவி வா!

2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## சுழல் காற்று

நான் சுழல் காற்று
நான் இதமாக தென்றலை விசிய போது
இந்தத் தேசம் என்னை ரசிக்கவில்லை
என்னை இதமாக அணைக்கவில்லை
மனது புழுங்கி சீற்றங் கொள்கிறதே!
இந்தத் தேசம்
எனக்குப் பிடிக்கவில்லை
வேறொரு தேசத்துக்குப் போகிறேன்!

என்னுள் ரீங்காரமிடும் முகாரி
மாரிக் காளானாகிறது
மனசு நிரம்பச் சோகச்சருகு
மலைகளையும் மாடி வீடுகளையும்
முட்டி மோதுகின்றன!
எரிந்த மரமென
நீண்ட சுமைகள்
நெஞ்சில் ஊனம் குமுறி
நளினத்துடன் மிதக்கின்றன!
உயர்ந்த மலைச்சரிவு
நெடுங்காடு
பரந்த சமுத்திரத்தை
கடந்த எனக்கு
இந்தத் தேசத்தில்
ஒதுங்க முடியவில்லை
வேட்டொலி கேட்கும்
மிருகங்கள் இதயம் போல
பட படத்துப் போகின்றேன்

என்னை அணைத்து விளையாடிய
பறவைகள்...
அடர்ந்த காடுகளே...
அழகிய கப்பல்களே...
நான் ஒதுங்கும் இடத்திற்கு



வரவேண்டாம்
என்னை எதிர்க்க கற்பாறைகள்
காத்திருக்கும்...
முட்செடிகளும் மணல் முகடுகளும்
இருக்கக் கூடும் - எனவே
நான் அனல் காற்றாக மாறிடுவேன்!

2002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

## புகைப்படம்

வழமையான நினைவுகள்
இனிமையானவையும் அல்ல
எந்நேரமும்
மிகச் சிறந்த பார்வைகள்
குடைந்து செல்கிறது
அன்றைய
புகைப்படத்தைப் பார்த்த என் சிந்தனை...
பொறுத்திரு
இது நானா?
கோடுகள் சுருக்குகள் இன்றி
மெல்லிய கழுத்து
புகைப்படம் பொய் சொல்லவில்லை
என்ன ஆச்சரியம்
இவ்வளவு தெளிவு
என்னால் நம்ப முடியவில்லை
என்னுடைய இரகசியங்கள்
தீர்மானம் இன்றி
மனமின்றி
சந்தேகமின்றி
நான் தான்
கூடவும் இல்லை குறையவும் இல்லை
கற்பனையின்றி
நான்தான்
கருணையோடு ஏற்றுக் கொண்டேன்
எல்லோரும் எதிர்நோக்கும்
வாழ்க்கையின் படம்
உணர்ந்து கொண்டேன்
கம்பீரமில்லை
ஒவ்வொரு வருடமும்
நான்...
எத்தனை இன்பமாகவிருக்கிறது...
இன்றும் இந்த உலகத்தில்
உலவிக் கொண்டிருக்கிறேன்...

2003







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நான் சாதாரணமாகவே
சட்டத்துக்குள்
நிலையானவள்
நீ
அடிக்கடி என்னை
வசையால்
திட்டித் தொலைக்கிறாய்
அந்தச் சத்தம்
சில சனங்களுக்காக
நான் விசனப்படுகிறேன்

நாகரீகமான சமூகத்திலே
மரியாதை
ஒழுங்காக நாம்
வெளிக்காட்ட முயல்கிறோம்
மிகவும் இலகுவாக
கோரமான
கோரத்துள் தப்பிவிடுகிறோம்

நான் தனிமையில் காரை ஓட்டும்போதெல்லாம்
எனது கைத்தொலைபேசியோடு
களிநடம் புரிவேன்
அடிக்கடி கேட்பாய்
என்னுடைய வதைகள்பற்றி
அப்பொழுது
அந்த தடைமின்னொளி
சிவப்பை விரித்து
அமைதியில் விழிக்கும்

காரை ஓட்டும்போது
அடிக்கடி
வேகங்களைக் குறைக்கும்
வீதி ஒழுங்குகள்



என் வேகத்துக்கு
தடை போடுகின்றன
அதற்குள் அமையவேண்டிய
கட்டாயம்
சட்டம்
விழித்துக்கொண்டிருக்கிறது
சிவப்பு விளக்குமாதிரி

அந்தச் சயிக்கிளில்
நடைபாதையில்தான்
தினமும்
ஊடறுத்துப்போவேன்
எனது உடற்பயிற்சிக்காக
ஆனால்
நான் இந்த வேளைகளில்
சட்டங்களை மீறுவதுண்டு
ஏனென்றால்
வீதிகளில் அதிகமாக
முட்டாள்களைத்தான் காண்கிறேன்

உனக்கும்தான்
அனுபவம் பேசும்
குற்றங்களும் சட்டங்களும்
அதிகரிப்பது
அதற்குரிய வரிகளும்
அளவுக்கு மீறித் தெரிவது
அரசியல் வாதிகளுக்கு
தெளிவுகள்
மங்கலாய்த் விரிவது! - இது
காதல் புரிந்துணர்வு
அல்ல என்பது!

குடியரசாம்
குடியுரிமை பெற்றவர்கள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

எங்கள் போன்றவர்கள்
எல்லாருமே
முளைக்கு வேலையில்லாத
வேலைகளோடு
எமது குடும்பம்
என்று இருக்கட்டாம்
சட்டமாம்
எப்படி இருப்பது?
நீதான்
பதில் சொல்லேன்!

2005



## புன்னகையைத் தொலைத்தவர்கள்

எனக்கு ஞாபகமிருக்கிறது
என் வீட்டு சாளரத்தில்
வெய்யிலின் கோலத்தில்
இங்கு அங்குமாகப் பூக்கள்.
ஓயாத பெருங்காற்றால்
உதிர்த்திட்ட மொட்டுக்கள்...
இளங்காலைப் பொழுதில்
பல் துலக்கும்போது
பயின்ற சிறு நடைகள் - என்
நடைகளின் மாற்றத்தில்
புன்னகைத்த ரசிகர்கள் ... இந்த
மெல்லிய நேசத்தை
புன்னகைத்த தேசத்தை
எப்படி மறப்பேன்...?

அந்த வசந்த காலம்
நாலாபுறமும்
மாம்பூக்களின்
நறுமணங்கள்...
சருகுகளை உதிர்த்துவிட்டு
புதிய இலைகள்
ஆடை போர்த்தி
உள்ளம் குழைந்து
உரத்துப் புன்னகைத்து பெருங்காற்று
குந்தியிருந்த குருவிகள்... இன்னும்
எத்தனை... எத்தனை... இன்று
துணை பிரிந்து
புன்னகை தொலைந்து
உயரத்தில் போகிறதே...

குளிரும் நாட்டில்
குறாவிக் குளிர்ந்தாலும்
என்னுள் வரட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆளை
விழுங்கும் கண்கள்
சிவந்து வாடி
எதையெதையோவெல்லாம்
இழந்துவிட்டு
நிர்வாணமாகி
இதயத்தை மட்டும்
இறுகிப் பிடித்தபடி
காற்றின் மாற்றமும்
போலி வேஷமும்
தரித்திரப் பொழுதுகள்
புன்னகையும் தொலைந்து
புதைந்து கிடக்கும் இரகசியம்...

தொப்பை வயிறும்
துருத்திய சதைகளும்
கங்கையும் யமுனையும்
கலப்பதுபோல் மீசையும்
சதை தொங்கும் முகமும்
மடிந்து தொங்கும்
மார்புகளும்
விகார உருவமும் சேர்ந்து
பிரவாகித்த
வீரச்செயல்கள்...
அறிவுப்பெருக்கமும்
தீட்ஷண்யமும்
சல்லடையில் சலித்து
சுகம் தந்தது
வித்தியாசமான
அத்தியாயங்கள்... முழக்கம் செய்தன - இன்று
புன்னகையைத் தொலைத்து
மாண்டு கிடக்கும் அந்தப் பூமி...

௨00டு



## திரும்பும் விழிகள்

படிமங்களின் சுமையை விட்டு
என் கவிதைகள் பரிணமிக்கின்றன
பெண் பிறவி...
என்னை அடக்குகிறது உலகம் ...
என் மொழிகள் உலகில் உணரப்படவில்லை
என் மொழி எனக்குள் உறைந்து மௌனமாகிறது

என் அடையாளம் யாருக்கும் தெரியக்கூடாதாம்
ஏகாந்த ஸ்பரிசத்தில்
மென்மையான சுவாசத்துள்
மெய் மறந்த தோற்றங்கள்
என்னை அழகுபடுத்துகின்றன
அமைதியான அழகு என்னுள்
ஆதங்கம் ஆகின்றன...

நான் வீட்டுக்கு வெளியே போகக்கூடாதாம்
நீண்ட தனிமைகள்...
என்னுள் துளிர்விட்டு...
நுட்பமான உணர்வுகளாகின்றன...
என்னுள்ளம் சில கணம்
எகிறி ஏங்குகிறது
கண்களின் ஓரத்தில்
கண்ணீர் ஓடுகிறது...

நான் கல்வி கற்கக் கூடாதாம் ...
கைதியைப் போல்
வலியை மறைத்துக்கொண்டேன்...
ஆறாத சினங்கொண்டவளாக
அசந்தன சிந்தனைகள்...
முடமாகின்ற கருத்துக்கள்...
மொழி
மன வலியை உணர்த்தாது
தேடல்கள் குவின்றன...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விரைவில் திருமணமாம்
எனக்கு
சக்தியற்றவளாய் சிந்திப்பதற்கு
வாழ்வின் அர்த்தங்கள்
விளங்கவில்லை...
வினாக்குறியில் விதைக்கின்ற சந்தோஷம்...
சிலையான என் மேனியை நிறுத்தினேன்
என் கண்ணாடி முன்...
சொற்கள் சிக்கனமாகி... என் அழகு
படிமங்களை விட்டு... உறைந்து...
இமை கவிழ்த்து... விழிகள் ததும்பி...!



www.tamilarangam.net


துளிப்பு

கடும் குளிரும் கடும் வெய்யிலும்
மாறி மாறியதாலோ
அந்தரமாயிருக்கிறது உடம்பு
எந்த நேரமும் சுதந்திரமாய்
வந்து போகிறது

உருண்ட பூமியும்
பரந்த பூமியும்
எல்லாம் ஒன்றுதான்
அங்கும் இங்கும்
உருவங்கள்
விறைப்பும் வெக்கையும்
வேடிக்கையாய்
வெளிறித் தெரிகிறது
வெண்மையின் வேதனையை
விடயம் தெரியாத
விளக்கு ஒன்று சொன்னது
துவங்கிய இடத்திற்கே
மறுபடியும் வந்திடுவோம்

கவித்துவத்தின் மேன்மை
காதலின் வென்மை
அன்பின் வலிமை
உண்மையில் நேர்மை
உழைப்பின் உயர்வு
உன்னிடத்தில் உணர்ந்தேன்

முபகாரி ராகம் தான்
முன்பெல்லாம்
முணு முணுத்தேன்
பூபாள பைரவியின்
ஆனந்த ராகத்தில்
கல்யாணியைக் காதலித்து
காலமெல்லாம் பாடவேண்டும்



என்னுள் நீளும்
எல்லா அதிர்வுகளும்
நீடித்த மௌனத்தில்
தனித்து தவித்து
தாளங்களாகி
அந்த வேர்களின் வேதனை
முடிவுற்ற தேடலில்
முனைப்புற்றுள்ளது.

உ004

தன் தயன போசன சுகங்களை
வேதனமாக்கி...
தன் குருதியை உயிர்களுக்கு
தானமாக்கி...
உலகுக்கு உனை உயர்
இனமாக்கி...
தாயகம் ஈன்றெடுத்த
மகத்தான குழந்தைகளே!

வாழப்பிறந்த வாரிசுகளே...
காடளந்த வேங்கைகளே...
விழி சிவந்து வீர காவியம்
படைத்து
தாயகத்தின் விடுதலைக்காய்
சிறகொடிந்து வீழ்ந்து
நிரந்தரமாய் ஆழ்ந்து
உறங்கிவிட்டீர்களா?

தாய் அகம்
இன்று...
புழகித்து சிலிர்த்து
ஏங்கித் தவிக்கிறதே...!

காலையில் கரையும்
காகங்கள் ஓசையும்
கர்நாடக சங்கீதமாக
இசைக்கிறதே...!

நெஞ்சுக்குள்...
ஏதோ திரண்டு எழுந்து
மூச்சை அடைக்கிறதே...!
ஆனால்...



தேசம் எங்கும் அமைதி
நிலவ
உங்கள் பங்களிப்போ
வரலாற்றில் மகத்தானதே...!

உங்கள் வீரச் செயல்கள்
கண்டு
வானில் மின்னும்
ஆதவனும்
தன் தலை குனிகின்றான்...!

2002

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



*When you look at me*
*It's like a jolt of electricity through my heart*
*Through my body, running, pulsing,*
*Through my veins like the music from a Thillana,*
*Making me want do dance.*

*When you talk,*
*My body Starts to shake.*
*And when you brush past me, accidentally,*
*My soul Starts to beat -*
*I an a miruthangam drun*
*Thmping.*

*And at the end, when you say goodbye*
*My hands wave gently, sadly -*
*And then, on the veena, you play my emotions*
*Better than I could say*

*And now all I have are the memories,*
*Beauty, excitement, surprise*
*Keeping me alive*
*Never allowing me to forget you*
*In my heart.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



ஜோகினி, மாஜிதா ஆகிய
புனைபெயர்களில் எழுதிவரும்
நவஜோதி ஜோகரட்னம் யாழ்ப்பாணம்
இளவாலை கொன்வென்டின் வார்ப்பு.
தலவாக்கலை, பண்டாரவளை
ஆகிய மலைப்பகுதிகளில் ஆசிரியையாக
பணியாற்றிய காலங்களில்
மலையகப் பெண்களின் துயரங் கவிந்த
வாழ்வை நேரடியாகவே காணும்
அனுபவம் வாய்க்கப்பெற்றவர்.
வேல் ஆனந்தன், வீரமணி ஐயர், பத்மினி
போன்றவர்களின் நடனச் சூழலுக்கும்
பரிச்சயமான நவஜோதி
நடன நாட்டியங்களிலும்
தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்.
ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின்
மூல புருஷர்களில் ஒருவரான
அகஸ்தியரின் புத்திரியான இவர்
தந்தையின் மிருதங்க வாசிப்பில்
லயித்த ரசனையை இத் தொகுப்பின்
சில கவிதைகளில் அழகாகவே
பதிவு செய்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்